



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொண்டன்

ஏப்ரல் – 2018

மலர் - 50 இதழ் - 03

✤ ஆசிரியர்

அருட்தந்தை. R. பயஸ் பிரசன்னா

✤ இணை ஆசிரியர்

மெற்றில்டா இராஜேந்திரம்

✤ துணை ஆசிரியர்

பெஸ்லியோ வாஸ்

✤ கணினி வடிவமைப்பு

சுபாஜெனி சங்கர்

✤ வெளியீடு

சமூகத் தொடர்பு நிலையம்,
மட்டக்களப்பு மறைமாவட்டம்.

✤ முகவரி

சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண். – 44,
மட்டக்களப்பு.

✤ பதிப்பகம்

வணசிங்கா அச்சகம்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.


## உள்ளே...


அன்புடன் உங்களோடு ........ 01
இயேசுவின் உயிர்ப்பே ........ 02
புனிதர்களை அறிவோம் ........ 03
குறுங்கதை ........ 04
உள்ளமெலாம் உயிர்ப்பின் ........ 06
இலக்கிய மஞ்சரி ........ 07
போதைப்பொருள் பாவனையும் ........ 08
உலகெங்கும் மரியாள் ........ 09
கலைக்கோட்டனின் இரு ........ 10
சின்ன விசயங்கள் சிறந்த ........ 12
நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் ........ 12
தொண்டனின் சில நிமிட ........ 13
மருத்துவம் ........ 14
திருஅவைச் செய்திகள் ........ 15
இதுதான்டா அரசியல் ........ 16
மாணவர் பக்கம் ........ 18
எண்ணிப்பார்க்கையில் ........ 19
கத்தோலிக்க திருஅவையின் ........ 20
இறை இரக்கம் ........ 22
கடுகுக் கதை ........ 23
தலைசிறந்த அறிவியலாளர் ........ 24
கத்தோலிக்க திருமறை ........ 26
திருவிவிலியம் கற்போம் ........ 27
அறிவை வளர்ப்போம் ........ 28



✵ ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ–ர்) ✵



SOCIAL COMMUNICATIONS CENTRE
P.O. BOX - 44
BATTICALOA.
TEL : 065 2226486
E-MAIL : battiscc@gmail.com



விலை: : 50/=

ஆண்டுச் சந்தா : 550/=

(தபாற் செலவு உட்பட)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அன்புடன் உங்களோடு....



'திருச்சிலுவையை நோக்குகின்றபோது
நஞ்சான நமது இதயங்கள் குணமாகின்றன'
– திருத்தந்தை பிரான்சிஸ்

என்னைக் குணப்படுத்தியவரைக் கொலைசெய்தார்கள். என் கண்ணீரைத் துடைத்தவரை வேதனைப்படுத்தினார்கள், எனக்குப் பார்வை கொடுத்தவருக்குக் காறித் துப்பினார்கள். என் கஷ்டத்தைப் போக்கியவரை அவமானப்படுத்தினார்கள். என்னைத் தூக்கி எடுத்தவரை துரத்தி அடித்தார்கள். என் குடும்பத்தின் தலைவரைக் குத்தி கொலை செய்தார்கள் மனித நேயம் இல்லாத நஞ்சு இதயம் கொண்ட மிருகங்கள். கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட என் ஆண்டவரைச் சீடர்கள் பலரும் நேரிலே கண்டார்கள். ஆண்டவர் – போதகர் என்று அவர்கள் கொண்டாடிய இயேசு இப்போது இல்லையே என்ற எண்ணம் சீடர்களின் மனங்களில் குழப்பத்தையும், இருளையும், அச்சத்தையும் ஏற்படுத்தியது.

தன்னை நம்பியவர்களை, தன்னில் விசுவாசம் கொண்டவர்களைக் குழப்பத்தில் விட்டுவிட்டு, கவலையைக் கொடுத்துவிட்டு, அநாதையாக விட்டுவிட்டு, கண்ணீரோடு விட்டுவிடுபவர் அல்ல என் ஆண்டவர் என்பதை ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் கல்லறை சென்றுபார்த்த சீடர்கள் மகிழ்ச்சியோடுதிரும்ப வந்த நிகழ்வும், வெற்றுக் கல்லறையும் எமக்குத் தெளிவு படுத்துகின்றன. நம்பிக்கைகொள் என் ஆண்டவர் உயிரோடு உன்னோடு இருக்கிறார்.

கிறிஸ்துவின் உயிர்ப்பு கட்டுக்கதையுமல்ல. கற்பனைத் திறனுமல்ல மாறாக திடமான, நம்பத்தகுந்த சாட்சியங்களோடு நிரூபிக்கப்பட்டுப் பலரின் கண்ணீரைத் துடைத்த வரலாற்று உண்மை. நம்முடைய வாழ்வுப் பயணத்தில் குடும்பமாக வாழும்போது கவலைகள் எம்மைச் சூழ்ந்துகொண்டு வேதனைகளைக் கொடுத்து, எதிர்பாராத நோய்கள் எம்மை மனம் தளர்ந்து போகச் செய்து களைப்பாய் நாம் இருக்கிறபோது திருச்சிலுவையை உற்று நோக்க வேண்டும். அப்படி உற்று நோக்குகின்றபோது அது எங்களுக்கு ஆறுதலைக் கொடுத்துச் சிலுவையில் இறந்து உயிர்த்தெழுந்த என் ஆண்டவர் உங்களுக்கு விடுதலையைக் கொடுப்பார், பயணங்களையும் ஆசீர்வதிப்பார்.

பூஜை முடிந்ததும் :
– பிரசாதமாய் மாறியது எலுமிச்சை
– தீர்த்தமாக மாறியது தண்ணீர்
– திருநீறாக மாறியது சாம்பல்

ஆனால், எந்தவித மாற்றமும் இன்றி வெளியேறுகிறான் பக்தன்.... என்று நாம் இருக்காமல் கிறிஸ்து உயிர்த்தது எனக்காக, நான் யாருமில்லாத அநாதையாகிவிடக் கூடாது என்பதற்காக என்ற உண்மையை உணர்வோம். மாற்றமடைவோம். வலியும், துயரமும், கண்ணீரும் மிகுந்த உலகில் உயிர்வாழும் நாம், என்னையும், என் குடும்பத்தில் இருக்கிற ஒவ்வொருவரையும், தொழில் துறைகளையும், பயணங்களையும் உயிர்த்தவரின் பாதங்களில் போட்டுவிட்டு அவரிலே அதிகமாக நம்பிக்கை வைப்போம். உயிருடன் இருக்கின்ற அவர் அதிசயங்களை நீங்கள் காணும்படி செய்வார்.
– ஆமேன்!

– ஆசிரியர் –

இறைவாக்கு

**"காக்கும் தேவனை கண்மூடி நினைத்துப்பார்
கரம் பிடித்து கவலைகள் தீர்ப்பார்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இயேசுவின் உயிர்ப்பே

## கிறிஸ்தவ விசுவாசத்தின் ஆதாரம்



"கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால், நாங்கள் பறை சாற்றிய நற்செய்தியும், நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்" (1 கொரி 15:14) என்று கூறி உயிர்ப்பைப்பற்றி புனித பவுலடியார் விளக்கியுள்ளார். கிறிஸ்தவ விசுவாசம், எதிர்நோக்கு, அன்பு மற்றும் வாழ்வின் அடித்தளமாக ஆண்டவரின் உயிர்ப்பு உள்ளது என்றால் அது மிகையாகாது.

நாசரேத்து இயேசு சிலுவையில் அறையப்பட்டு நம் பாவங்களுக்காக இறந்தார்; மறை நூலின் கூற்றுப்படி மரித்த மூன்றாம் நாள் உயிர்த்தார் என்பதே திருத்தூதரின் முதல் விசுவாச அறிக்கை. இயேசுவின் கைது, சிலுவை மரணம் சீடர்களின் விசுவாசத்தை சுக்கு நூறாக்கியபோதும், அவர்களால் உயிர்ப்பு என்ற உறுதிப்பாட்டை எப்படி எட்ட முடிந்தது? தைரியமாக உயிரைப் பணயம் வைத்து எப்படித் துணிவுடன் அறிக்கையிட முடிந்தது? அவர்கள் உயிர்த்த ஆண்டவரைச் சந்தித்ததே இதைச் சாத்தியமாக்கியது (லூக் 24:13-14, யோவா 20:19) எனலாம்.

கல்லறைக்குச் சென்ற பெண்கள் கல்லறை வெறுமையாய் இருப்பதைப் பார்த்ததும் வான தூதர், "உயிரோடு இருப்பவரைக் கல்லறையில் தேடுவதேன்? அவர் இங்கே இல்லை. அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்" (லூக் 24:5-6) என்று கூறியதைக் கேட்டதும் பெண்களைக் குழப்பமடையச் செய்தது. சீடர்களின் விசுவாசத்தைச் சிதைத்து சின்னாபின்னமாக்கியது. ஆனால், உயிர்த்த இயேசுவின் காட்சிகள் இயேசுவின் உயிர்ப்பு, அவர் கடவுள், இறைமகன், மெசியா, மீட்பர் என்ற விசுவாசத்தை ஆழப்படுத்திச் சந்தேகத்துக்கு இடமின்றி உறுதிப்படுத்தியது (யோவா 20:19). காலியான கல்லறையை இயேசு உயிர்த்து விட்டார் என்பதற்கு கடவுள் சாட்சியாக்கினார்.

சிலுவை, இறப்பு, கல்லறை என்று எதுவும் இயேசுவைத் தன்னகத்தே வைத்துக்கொள்ள முடியவில்லை. சிலுவையை, இறப்பை, கல்லறையை வெறுமையாக்கி வெளியே வருகிறார் இயேசு. இறை மைந்தன் இயேசு இன்று உயிர்த்து விட்டார் என்று அல்லேலூயா! கீதம் இசைப்போம். "ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இதுவே; இன்று அக்களிப்போம்; அகமகிழ்வோம்" (தி.பா 118:24) என்று திருப்பாடல் ஆசிரியருடன் பாடி மகிழ்வோம்.

ஏறக்குறைய ஈராயிரம் உயிர்ப்பு விழாக்களைக் கொண்டாடி மகிழ்ந்துள்ளது நமது கிறிஸ்தவம். ஒவ்வோர் ஆண்டும் நாற்பதுக்கும் மேலான பல நாள்களாகத் தவமிருந்து, ஒறுத்தல் புரிந்து அதன் உச்சக்கட்டமாகவே இந்த உயிர்ப்பு விழாவைக் கொண்டாடுகிறோம். ஆனால், உட்பொருளை உள்வாங்கி உயர்ந்துள்ளோமா என்பதுதான் இன்று நாம் சிந்திக்க வேண்டிய கேள்வி.

பேரருட்தந்தை ஜோசப் பொன்னையா ஆண்டகை
மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குத் தகுந்த பதிலை புனித பவுல் அடிகளாரும், காந்திஜியும் தருகின்றனர். "கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின், அவரோடு வாழ்வோம் என்பதே நாம் கொண்டுள்ள நம்பிக்கை" (உரோ 6:4). இந்த நம்பிக்கையை தாமும் வாழ்ந்து காட்டிய பவுல் அடியார் இவ்வாறு பகர்கிறார்: "கிறிஸ்துவையும் அவர்தம் உயிர்த்தெழுதலின் வல்லமையையும் அறியவும், அவருடைய துன்பங்களில் பங்கேற்று, சாவில் அவரை ஒத்திருக்கவும் விரும்புகிறேன். அப்பொழுதுதான் நானும் இறந்தோருடன் உயிர்த்தெழ இயலும்" (பிலி 3:9-11).

இக்கூற்றுக்களின் அடிப்படையில் இன்னும் அழுத்தம் பெறுகிறது காந்திஜியின் அறை கூவல். "1900 ஆண்டுகளுக்கு முன் இயேசு மரித்தார் உயிர்த்தார் எனும் செய்தி அற்பமான ஆறுதல். ஒவ்வொரு நாளும் அவர்தம் இறப்பையும் நீங்கள் வாழ்ந்து காட்டினாலன்றி, உங்கள் நற்செய்தி அறிவிப்புப் பணி வீணிலும் வீண்!"

ஒருவேளை இன்று நம் மறைபரப்புப் பணியில் ஒரு நெருக்கடி நிலையை உலகெங்கிலும் உணர்வது அதனால்தானோ என்னவோ... உண்மையான உயிர்ப்பின் உள்பொருளை உணராது, அதை வாழ்ந்து காட்டாததன் விளைவாகத்தான், நாம் கூறவரும் நற்செய்தியில் உப்பும் இல்லை, சப்பும் இல்லை என உறுதிபடக் கூறலாம். ஆம், உயிர்ப்புப் பெருவிழாவைக் கொண்டாடும் நாம் உயிர்ப்பின் மறைபொருளை முற்றும் உணர்ந்து வாழ்வாக்கிக் காட்டினால்தான் நாம் நல்கும் நற்செய்திக்கு நம்பகத்தன்மை கிட்டும்.

உயிர்ப்பு விழா நமக்குக் கூறும் செய்தி என்ன எனக் கேட்டால் நமது வாழ்வுதான் உயிர்த்த கிறிஸ்துவுக்கு சான்று பகரும் அடித் தளமாக அமைய வேண்டும். சீடர்கள், அவர்களின் போதனையைக் கேட்ட மக்கள் உயிர்த்த ஆண்டவரை நம்பினர். நாமும் நம்புவோம். உயிர்வாழும் நற்செய்தியாக வாழ முற்படுவோம்.

எமது பகைவரை மன்னிக்கும்போது கிறிஸ்துவோடு உயிர்த்தெழுகிறோம். எம்மை விருந்துக்கு அழைக்க முடியாதவர்களை நாம் விருந்துக்கு அழைக்கும்போது கிறிஸ்துவோடு உயிர்த்தெழுகின்றோம். துன்பம், கஸ்டம், அநீதி போன்றவை நிரந்தரமானவை அல்ல; இருள், இறப்பு கூட நிரந்தரமானவை அல்ல. கடவுளின் அன்பும், அனைத்தையும் மாற்றக்கூடிய அவரது வல்லமையுமே நிரந்தரமானது என நம்பி வாழும்போது கிறிஸ்துவோடு உயிர்த்த வாழ்வு வாழ்கின்றோம்.

மனிதரிடையே வேற்றுமை பார்க்காமல், ஒவ்வொருவரும் கடவுளின் சாயல், கடவுளின் பிள்ளை, என் சகோதரன், சகோதரி எனப் பார்க்க முற்படும்போது நாம் உயிர்த்த வாழ்வு வாழ்கின்றோம். இது தொடர்கதையாக மாறும்போதுதான் இயேசுவின் கனவு நனவாகும்.

அல்லேலூயா! ஆண்டவர் உயிர்த்து விட்டார்.
அனைவருக்கும் அமைதி உரித்தாகுக!. □

## புனிதர்களை அறிவோம்

### புனித சோட்டரூஸ் – ஏப்ரல் 22ந் திகதி

இத்தாலி நாட்டில் பாண்டி என இப்போது அழைக்கப்படும் இடத்தில் சோட்டரூஸ் பிறந்தார். 166ம் வருடம் திருத்தந்தையானார். கொரிந்து திருச்சபைக்கு இவர் கடிதம் எழுதியுள்ளார். இன்றுள்ள புனித கிளெமன்ட் எழுதிய 4ம் திருமடல் இவர் எழுதியதாக இருக்கலாம் என ஹார்னாக் குறிப்பிட்டுள்ளார். இவரது காலத்தில் மார்க்குஸ் அவுரேலியுஸ் என்பவன் உரோமையில் அரசாட்சி செய்துவந்தான். இவன் எழுதிய 'சிந்தனை' எனும் நூல் இலக்கியத்தரம் வாய்ந்ததாகும். இவனும் இவனது படை வீரர்களும் பொகிமியாவின் மலைப்பகுதியில் வாழ்ந்த பழங்குடி மக்களிடம் ஒருமுறை சிக்கிக்கொண்டார்கள். தப்பிக்க வழியில்லை. தாகத்தால் வீரர்கள் சாக ஆரம்பித்தார்கள். எதிரிகளும் சுற்றிவளைத்தனர். அப்போது, அப்படையிலிருந்த சில கிறிஸ்தவ வீரர்கள் இறைவனிடம் பக்தியுடன் மன்றாடினார்கள். இறைவனின் பேரருளால் உரோமைப் படையின் பக்கம் மழையும், எதிரிகள் படையின் பக்கம் சூறாவளியும் சூழ எதிரிகளிடமிருந்து மார்க்குஸ் தனது வீரர்கள் அனைவருடனும் காப்பாற்றப்பட்டான். எனவே, கிறிஸ்தவர்கள் மீது மார்க்குஸ் மரியாதை வைத்தான். சிறிது காலத்திலேயே மற்றவர்களின் பேச்சைக் கேட்டு, கிறிஸ்தவர்களை வெறுக்க ஆரம்பித்தான். 'கிறிஸ்தவர்கள் உல்லாசமாக வாழ வேண்டியதுதானே? சமயத்திற்காக ஏன் உயிரை விடவேண்டும்? கிறிஸ்தவ மறையைப் போதிக்கும் உரோமைக் குடிமக்கள் நாடு கடத்தப்படவேண்டும். கீழ்ச் சாதியினர் வாளால் வெட்டிக் கொல்லப்படவேண்டும்' என உத்தரவிட்டான். இக்கட்டளைப்படி கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்களுள் ஒருவராக 175ம் வருடம் சோட்டரூசும் வேதசாட்சியானார்.

– மற்றில்டா இராஜேந்திரம் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குறுங்கதை – 42

# ஓரிரவில்...

வீக்கேயெம்

திரிகோணமலைக் கோட்டையைக் கைவிட்டு வெள்ளைத் தோல் நேவிக்காரன் அகன்று போவதன்முன், அங்கு கடமை புரிந்த ஊழியர்களுக்குச் சிறு சிறு சலுகை செய்ய முன் வந்தான்.

"காணி வேண்டுமா? காசு போதுமா?" என்று வினவியபோது, அநேகர் காணி வேண்டுமென்றனர். படித்த வேறு சிலர் வேறேதாவது தொழில் செய்து உழைக்கலாமென்ற தோரணையில் காசு தந்தால் தேவலை என்றனர்.

இந்த இரண்டாவது தரப்பினர், அங்கு களியராகக் கடமையாற்றிய சிவப்பிரகாசத்தார் மூலம், பெருந்தொகைப் பணம் கிடைக்குமென்பதை முன்கூட்டியே அறிந்திருந்தனர்.

காணி கேட்டவர்களுக்கு, பயிர் செய்வதற்கேற்ற விவசாயக் காணிகளை அவரவர் தகுதிக்கேற்றபடி ஓர் ஏக்கர் முதல் மூன்றேக்கர் வரையும் பகிர்ந்து கொடுக்கச் சித்தமானான். வீடு கட்ட நிலம் கேட்டவர்களுக்குப் புறநகர்ப் பகுதியில் காணிப் பங்கீடு செய்தான். சிறுதொகைப் பணத்தையும் கொடுக்க முன்வந்தான்.

உயர் கல்வித் தகைமையுடன் பண உதவி கேட்ட அலுவலர்க்கு, வரப்போகும் இலங்கை அரசு கோரும் வெற்றிடங்களை நிரப்புமுகமாக நற்சான்றிதழ்களைக் கையளித்ததுடன், அவரவர் தொழில் நிலைக்கேற்ப, அவர்கள் நினைத்தும் பார்த்திராத அளவிற்குப் பணத்தைக் காசாகவே கையளித்ததுடன், இரவு விருந்தொன்றிற்கும் ஏற்பாடு செய்து, தான் வெள்ளைக்காரன்தான் என்பதை நிரூபித்தான்.

முற்றவெளி முன்றலில் 'காணிவல்' என்ற களியாட்டு விழா ஒரு வாரமாக முகாமிட்டு நடந்துகொண்டிருந்த மூன்றாவது நாளிலேயே அந்தப் பிரியாவிடை வைபவம் நடைபெற்றுக்கொண்டிருந்தது.

பொதுவாகவே, குதிரை மீது பணம் கட்டி அடிக்கடி ஜெயித்துக்கொண்டிருந்த சூதாட்டப் பிரியரான களியர் சிவப்பிரகாசத்தார், நெல்சன் தியேட்டரின் வடபுறமாக வீதியருகேயிருந்த யாழ்ப்பாணத்துச் சொந்தக்காரர் ஒருவரின் சொந்த வீட்டில் இருபது வருடங்களாகக் குடும்பத்துடன் குடியிருந்தார்.

என்றுமில்லாத மகிழ்வோடு வீடு திரும்பியிருந்த சிவப்பிரகாசத்தார், கொண்டுவந்த பெருந்தொகைப் பணத்தைத் தன் மனையாளிடம் கொடுத்து, பத்திரமாக வைக்குமாறு உபதேசம் வேறு செய்தார்.

அவளும் புத்தம் புதிய நோட்டுகளாகப் பணக்கட்டைப் பார்த்த புளகாங்கிதத்தில், அலுமாரிக்குள் வைத்துப் பூட்டி, சாவியை எடுத்துத் தலையணைக்குக் கீழே வைத்த பெருமிதத்துடன் அயர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தூங்கிவிட்டாள். சிவப்பிரகாசத்தார் தானும் அருளாமல், அவளையும் அருட்டாமல் சாவியை எடுத்து அலுமாரியைத் திறந்து, அருகாமையிலிருந்த சேமக் காலை மதிற் சுவரால் ஏறிக் குதித்து காணிவல் நடக்கும் இடத்திற்கு நடையைக் கட்டினார். தொகையாகக் கிடைத்த முழுப் பணத்தையும் கையகப்படுத்திக்கொண்டவராய்.

தன் சக ஊழியரான சிவஞானத்தாருக்கு விடயத்தைச் சொன்னதும் அவர் திகைத்துப் போனார்.

“வேண்டாம் சிவா, நீ வீட்டுக்கே போயிடு. நாளைக்கும் காணிவெல்லுக்குப் போகலாம். இப்ப போனால் இவ்வளவு பணத்தையும் கோட்டை விட்டிட்டு சூஸைட் பண்ணிற மனநிலைக்குப் போனாலும் போயிடுவாய்..... பிளீஸ் ..... இன்டைக்கு வேண்டாமடா... ஆற அமரச் சிந்தித்து முடிவெடடா!"

நட்பின் அடையாளத்தை நாணயமாக நிலைநாட்ட முயன்றார் சிவஞானம்.

அதையெல்லாம் காதில் வாங்கிக்கொள்ளும் மன நிலையில் இல்லாத சிவப்பிரகாசத்தார்,

"போடா நீ உன்ர பாட்டில ... சூஸைட் பண்ணிற அளவுக்கு உன்னைப் போல நான் கோழையில்லை... விரும்பினால் வா..... நான் போறது போறதுதான்...” என்றார் இறுமாப்புடன்.

"போட்ட பணத்தை இரட்டிப்பாகக் கொண்டு வர எனக்குத் தெரியும். நீ இப்ப பேசாமல் வா” என்று அதட்டினார்.

வேறு வழியின்றி சிவஞானமும் அவருடன் இழுபட்டார், எப்படியாவது அவரைக் காப்பாற்ற வேண்டும் என்று உறுதி பூண்டவராய்.

சூதாட்டம் தொடங்கியது. மல்லனும் பொல்லனுமாக நின்றவர்களைப் பார்த்ததுமே சிவஞானத்தாருக்கு குலை நடுக்கம் பிடித்தது.

ஆரம்ப ஆட்டத்தின்போது வைப்பிட்ட பணத்திற்கு மேலாகச் சேகரம் எகிறவே செய்தது.

"இவ்வளவோடு ஆட்டத்தை நிறுத்திக்கொள். இதுக்குமேல பந்தயம் கட்டாதை. இதையே சூரன்கள் பறித்துக்கொண்டுதான் ஆளை விடுவான்கள். மெல்லக் கழிறதுதான் புத்தி" என்று காதுக்குள் கிசு கிசுத்த சிவஞானத்தாரின் தொடையில் ஓங்கி அடித்துத் தன் கோபத்தை வெளிப்படுத்தியதும், சிவஞானத்தார் பெட்டிப் பாம்பாக அடங்கி ஒடுங்கி மௌனித்தார்.

விட்டுப் பிடித்து ஆசைகாட்டித் தூண்டிவிட்ட 'பெரிசுகள்' சூறாவளியாக இயங்கத் தொடங்கியதும் ஆடித்தான் போனார் ஆசாமி.

வெறுங்கையோடு திரும்ப நேர்ந்ததில் மனிதர் துவண்டுபோனார்.

முன் போலவே மதிலேறிக் குதித்து ஒன்றுமே தெரியாதவர் போல் படுக்கையில் புரண்டார். தூக்கம் நழுவிற்று.

காலையில் குய்யோ முறையோ என்று புலம்பிய மனைவியிடம் சிவஞானத்தார் வந்து உண்மையை போட்டுடைத்தபோது, அவர் வரவை எரிச்சலுடன் ஏற்றுக்கொண்டார் ஆற்றாமையுடன். ■

## நீங்கள் அதிகாரம் செய்யும் பெற்றோரா?

சில பெற்றோர்கள் தம் விருப்பமே பிள்ளைகள் விருப்பம் என்று நினைப்பார்கள், நடத்துவார்கள். பிள்ளைகளுக்கும் உணர்வு இருக்கும் என்பதே இவர்களுக்குத் தெரியாது. அதனால், இவர்கள் பிள்ளைகளுக்கு நல்லதே செய்தாலும், அதைப் பிள்ளைகள் புரிந்துகொள்ள மாட்டார்கள். இப்படிப்பட்ட பெற்றோரின் பிள்ளைகள் எப்படி வருவார்கள் தெரியுமா? உண்மையைச் சொன்னால் அம்மா திட்டுவாரோ, அல்லது அப்பா அடிப்பாரோ என்று பயந்துகொண்டு பொய் சொல்லப் பழகுவார்கள். எந்தவொரு இக்கட்டான சூழ்நிலைகளையும் இவர்களால் சமாளிக்க முடியாது. ஆழ்மனதில் இவர்களுக்குத் தங்களைப் பற்றிய உயர்ந்த சுயமதிப்பீடு இல்லாததால், முடிவுகள் எடுக்க முடியாமல் தவிப்பார்கள். வீட்டில் காட்டமுடியாத கோபத்தை வெளியில் காட்டுவார்கள். எனவே, நீங்கள் அதிகாரம் செய்யும் பெற்றோர் என்றால், பிள்ளைகள் நலன் கருதி அதை இன்றே மாற்றிக் கொள்வது நலம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளமெலாம் உயிர்ப்பின் வாசம்

– அருட்பாவலர் நிலாதமிழின்தாசன் –

இப்புவியின் மாந்தருள்ளே ஒளியைக் கூட்டி
இனிதாக வாழ்ந்துயரும் வழியைக் காட்டி
செப்பமுடன் போதனைகள் பொழிந்த மேகம்
தேவசுதன் திருவுடலை வதைசெய்தார்கள்
துப்பியவர் திருமுகத்தில் சாட்டையாலே
துளியிரக்கம் காட்டாமல் துவம்சம் செய்தார்
இப்புவியின் துயர்துடைத்து அருள வந்தார்
ஈனர்களின் கொடுஞ்சுமைகள் சுமந்து நொந்தார்

முள்முடியைத் தலையினிலே மூர்க்கர் சூட்டி
முதல் மகனின் திருவுடலில் ஆணி ஏற்றி
வெள்ளைமனத் திறைமகனைச் சிலுவைமீது
வெறிப்புலையர் தொங்கவைத் துயிர் பறித்தார்
கொள்ளையர்கள் இருபுறமும் தொங்க இயேசு
கோமகனை நடுவினிலே நட்டுஅவ மானம்செய்தார்
உள்ளமதில் துயர்பொங்க மக்கள் கூட்டம்
ஓவென்று! தாமழுது அடைந்தார் வாட்டம்.

விடியல்தர வந்த அருட் பகலோன் தன்னை
வீழ்த்தியதாய் குதூகலித்து மகிழ்ந்தார் ஈனர்
மிடிமையொடு அடிமையிருள் தன்னில் மூழ்கி
மிகுதுயரில் தோய்ந்த மக்கள் மூன்றாம் நாளில்
விடிவுதருஞ் சுடரெனவே உயிர்த்தார் இயேசு...!
வீழ்ச்சி எமக்கில்லையெனக் கண்டின் புற்றார்
குடிமக்கள் உள்ளமெலாம் உயிர்ப்பின் வாசம்
குவலயத்தின் திசைமுழுதும் இயேசுபுகழ் தன்னைப்பேசும்

சிந்திக்க சில வரிகள் ... 25

உயிர்ப்பு அது இயற்கை நாடுவது
துடிப்புள சமூகம் உயிர்ப்புடன் வாழும்
அகிலத்தில் இறந்தோர் ஓர்நாள் நம்
கிறிஸ்துவைப் போல உயிர் பெற்றெழுவர்.

– ராஜ் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

- ஆழியோன் -

## நீரும் நாமும்




இம்முறை மழை பொய்த்து, பருவ காலங்களை விட்டு வேறு காலங்களில் பொழியத் தொடங்கியது. இதனால், நெற்செய்கை, பயிர்ச்செய்கையெல்லாம் பாதிப்புக்குள்ளாகிவிட்டன.

சனத்தொகை அதிகரிப்பும், நகரமய மாக்கலும் நீர்பாவினையை அதிகரிக்கச் செய்துவிட்டன. அதிகமான பிரதேசங்களில் நிலத்தடி நீர்தான் வீட்டு, விவிசாயத் தேவைகட்குப் பயன் படுத்தப்படுவதனால் நிலத் தடி நீரும் குறைவடைந்துவிட்டது. போதாக்குறைக்கு சதுப்பு நிலங்கள் நிரப்பப்பட்டு வருவத னால் வெள்ளநீர் வடிந் தோடும் இடங்கள் பற்றாக்குறையாகிவிட்டன. இதனால் நகரப்புறங்களில் வெள்ளப்பாதிப்பு அதிகமாகி விட்டது. மட்டக்களப்பின் நகரினை அண்டிய பிரதேசங்கள் "நீர் ஏந்தும் பிரதேசங்கள்" என்றே இலங்கை வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இப்போது மண் நிரப்பப்பட்டு வீடுகள் கட்டப்பட்டுள்ளன. சில மண்ணியல் ஆய்வாளர்களின் கருத்துப்படி, குறிப்பிட்ட சில ஆண்டுகளின் பின் அவ் வீடுகள் தாழிறங்கும் அபாயம் உள்ளதாம். இதுபற்றிச் சம்பந்தப்பட்டவர்கள் கவனமெடுக்க வேண்டும்.

அத்துடன் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது தொடர்பிலும் நமது சமூக அக்கறை தீவிரப் படுத்தப்பட வேண்டும். எமது பகுதிகளிலும் படிப்படியாக குடி நீர் பற்றாக்குறை ஏற்பட்டு வருகின்றது. உலகின் 2/3 பங்கினர் நீர் பற்றாக்குறை யால் அவதிப்படுகின்றனர். இதன் தீவிரத் தன்மையை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

•



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போதைப்பொருள் பாவனையும் இன்றைய குடும்பங்களின் நிலையும்

■ அருட்சகோதரி லூட்ஸ் F.M.M

"ஆலுமா டோலுமா இத்தாலங்கடி மாலுமா...."
"ஆளப்போறான் தமிழன் உலகம் எல்லாமே...."

"என்னடா மோகன் ஒரு நாளும் இல்லாமல் இண்டைக்கு இப்படி பாடிக் கொண்டு வாறான்" சமையலறையில் இருந்த தாய் ஓடிவந்து வெளியே பார்த்தாள். அவளது மகன் தன் சுயநினைவை இழந்த நிலையில் பாடிப் பாடிப் புத்தகப் பையுடன் வெறும் மண்ணில் படுத்துவிட்டான். தாய் செய்வதறியாது அவனைத் தூக்கி அறையிலுள்ள கட்டிலில் படுக்க வைத்தாள். மோகனோ பாடலை அரை குறையாகப் பாடிக்கொண்டே இருந்தான். 14 வயதுப் பாலகன் தன் மகனுக்கு ஏதோ நடந்துவிட்டது என எண்ணிய அவனது தாய் அவனது ஸேட் பையில் கை வைத்துப் பார்த்தாள். போதைவஸ்து உள்ள அரைகுறையான ஒரு பக்கட் அவளது கையில் அகப்பட்டது. நடந்ததை ஊகித்தறிந்த அவள் கண்ணீர் விட்டுக் கதறினாள். தன் கணவனிடம் ஓடிச்சென்று மகனின் நிலையை எடுத்துக் கூறினாள். அவர் பதை பதைத்துப்போய் அவனை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றார். இதைப்போன்று இன்று எத்தனை குடும்பங்கள் சீரழிந்து நிற்கின்றன. இன்று போதைவஸ்துக்கள் விதவிதமான வடிவங்களில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. பள்ளி மாணவர்களுக்கு இனிப்பு வடிவங்களிலும், வயோதிபர்களுக்கு வெற்றிலை, பாக்கு வடிவங்களிலும், இளையோருக்கு இன்னும் பல வடிவங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றன. இதனை இறக்குமதி செய்வோரைத் தடுத்து நிறுத்துவதாக அரசாங்கம் தம்பட்டம் அடிக்கிறது. ஆனால், இதனால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவே தோன்றுகின்றது. குறைவதாகத் தெரியவில்லை. கடல் மூலமாகவும், விமான மூலமாகவும் பிரயாணம் செய்வோர் இவற்றைக் கொண்டு வருகின்றனர். இதனை முற்றாக ஒழித்துக் கட்ட யார் முன் வருவார்? இதனால் துன்புறுவோர், கண்ணீர் வடிப்போரின் தொகை குறையாதா? இளையோரின் வாழ்க்கை சின்னா பின்னமாக்கப்படக் காரணம் எமது நாட்டில் விற்பனையாகும் போதைப் பொருட்களாகும். குடும்பங்களில் இப்போதைவஸ்துக்கள் நுழைந்து விசேடமாக குடும்பத்தலைவர்களையும், இளையோர்களையும் வகைதொகையின்றி அடிமைகளாக்கிக் குடும்பங்களைக் குட்டிச் சுவராக்கி வேடிக்கை" பார்க்கிறது.

குடும்பத்தில் கணவன், மனைவிக்கிடையில் சண்டை சச்சரவுகள், கொலை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாசகர்களின் கவனத்திற்கு ....**

கடந்த மார்ச் மாதத் தொண்டனில் பிரசுரமாகிய 'புரிதல்' சிறுகதையை எழுதியவர் திரு. கிறிஸ்டி முருகுப்பிள்ளை என்பதனைத் தங்களுக்கு அறியத்தருகின்றோம். (ஆ+ர்)

கொள்ளை, பிள்ளைகளை வளர்க்க வழியில்லை, கையிலே பணமில்லை, உண்ண உணவில்லை, உடுக்க உடையில்லை, பிள்ளைகளைக் கல்விமான்களாக்கக் கையில் காசில்லை. கணவன் போதைப் பொருட்களை வாங்கி நண்பர்களுடன் கூடி நடனமாடிக் கொண்டாடுகின்றான். இந்த பரிதாபகரமான நிலைக் குடும்பங்களை போதைவஸ்து உள்ளாக்கி விட்டது.



இவ்வாண்டு எம் நாட்டு மக்களைப் போதைவஸ்து போதும் என கூறப் போகிறதா? அல்லது கடந்த ஆண்டை விட அதிகமானோரைக் கவர்ந்திழுக்கப் போகின்றதா? என ஏங்கிக் கிடக்கும் எம் மக்களை விடியலைக் காணவைக்குமா? இதனைக் குறைக்க தெய்வத்திடம் முதலில் சரணடைவோம். இப்போதைவஸ்துக்களை ஒழிக்க மக்களை ஒன்றுகூட்டி விசேடவிதமாக இளையோரையும், எமது குடும்பப் பெண்களையும் ஒன்று சேர்த்து மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி நம் மக்கள் போதைப்பொருள் பாவிப்பதைத் தடுத்து நிறுத்த முன்வருவோமா? எம் குடும்பங்கள் போதைப் பொருளை நீக்கி மகிழ்ச்சியுடன் வாழ வாழ்த்துகின்றேன். ■

விக்கிப்பீடியா

**த**மிழ் விக்கிப்பீடியா அறிமுகம். 2010 எது பற்றித் தேடினாலும் அது குறித்த தகவல்களை அள்ளித்தரும் கலைக் களஞ்சியம் விக்கிப்பீடியா. தகவல்களைத் தமிழில் தேடுவோருக்குக் கிடைக்கும் வண்ணம் 27.03.2010 ஆம் ஆண்டு தமிழ் விக்கிப்பீடியா உருவாக்கப்பட்டது.

## உலகெங்கும் மரியாளின் புகழ்... 36

### நெருப்பின் அன்னை:
ஃபோர்லி, இத்தாலி



1428ம் ஆண்டின் பெப்ரவரி மாதத்தில் 3ம்-4ம் திகதிகளின் நள்ளிரவின்போது, ஃபோர்லி என்ற ஊரில் உள்ள பள்ளிக்கூடத்தில் தீ விபத்து ஏற்பட்டது. அந்த தீ சில நாட்கள் தொடர்ந்து எரிந்தது. தீயால் நாசமாக்கப்பட்ட இடிபாடுகள் மற்றும் சாம்பலிலிருந்து, மாணவர்களால் அன்போடு வணக்கம் செலுத்தப்பட்ட அன்னை மரியாள் மற்றும் குழந்தை இயேசுவின் மரத்தால் செய்யப்பட்ட திருவுருவச்சிலையை நகர மக்கள் கண்டறிந்தனர். நகர ஆளுநர் மற்றும் திருத்தந்தையின் பிரதிநிதியின் ஆணையின்படி இந்த அற்புத உருவச்சிலையானது, பேராலயத்தில் வைக்கப்பட்டது. 1636ம் ஆண்டில், பேராலயத்தில் பளிங்குக் கற்களால் ஒரு சிற்றாலயம் உருவாக்கப்பட்டு நெருப்பின் அன்னை மரியாள் என்ற பெயரில் அர்ச்சிக்கப்பட்டது. இந்த பிராந்தியம் முழுவதிலும் நெருப்பின் அன்னை சிலைகள் வீடுகளின் கதவு நிலைகளிலும் மற்றும் வாகனங்களிலும், நெருப்புக்கு எதிரான பாதுகாப்பாக வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். நெருப்பின் அன்னையை ஃபோர்லி நகரின் பாதுகாவலராக அறிவிக்கப்பட்ட பிறகு, அன்னையின் திருநாள் கொண்டாட்டமானது, பெப்ரவரி 4ம் திகதியன்று தொடங்கி அதற்கு அடுத்து வருகிற ஞாயிற்றுக்கிழமை வரை நீடிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கலைக்கோட்டனின் இரு நூல்கள் வெளியீட்டு விழா





கலாபூஷணம், வித்தகர், கொடகே விருது ஆகியவற்றைப் பெற்றுள்ள கலைக்கோட்டன், அ. இருதயநாதன் அவர்களின் உணர்வுகள் (நாடகத் தொகுதி) மற்றும் அமேசன் காட்டில் அழகன் பூசாரி (சிறுகதைத் தொகுதி) ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா அண்மையில் மட்/மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வானது கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரும், ஈழத்து இலக்கிய உலகில் அன்றும் இன்றும் பேசப்படுகின்ற எழுத்தாளர் வ.அ.இராசரெத்தினத்தின் புதல்வருமாகிய அருட்பணி. A.A. நவரெத்தினம் (நவாஜி) அடிகளாரின் தலைமையில் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வாக அதிதிகள் மங்கல விளக்கேற்ற செல்வி. நிலக்ஷினி விமலதர்ஸனின் தமிழ்மொழி வாழ்த்து இடம்பெற்றது. வரவேற்புரையை "மகுடம்" நூலாசிரியர் மைக்கல் கொலின் ஆற்றினார். முதன்மைப் பிரதிகளை அரச ஒப்பந்தக்காரர் இரா. பஞ்சாமிர்தம் அவர்களும், பிரபல தொழிலதிபர் திரு. N.R. பத்மநாதன் (பாபு) அவர்களும் பெற்றுக்கொண்டனர். நாடக ஆய்வுரையினை மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத் தொடர்பு நிலையத்தின் புதிய உலகம், சிறுவர் உலகம் ஆகிய வானொலி நிகழ்ச்சிகளின் ஆரம்ப கர்த்தாவும், முன்னாள் தயாரிப்பாளருமான திரு. மலர்வேந்தன் ஆற்றினார். சிறுகதைகளின் ஆய்வுரையினை கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி. ரூபி வலன்ரீனா பிரான்சிஸ் ஆற்றினார். சிறப்பு அதிதிகளில் ஒருவரான மட்/வலயக் கல்விப் பணிப்பாளர் தனது உரையில், "கலைக்கோட்டன் பல கலைகளையும் ஆற்றுகைப்படுத்தக்கூடிய அபார திறமை வாய்ந்தவர். இவர் அதிபராகக் கடமையாற்றுகையில் குறிப்பாக மண்முனை மேற்குக் கல்விப் பிரதேசக் கல்வியில் மிகவும் அக்கறை கொண்டு பணியாற்றினார். அகில இலங்கைத் தமிழ் மொழிப் போட்டியில் கூத்துக்கள் இடம்பெற்றபோது நடுவராக இவரை நாம் அழைப்போம். இன்றைய தினம் இரு நூல்களை வெளியிட்டுள்ள இவரை வாழ்த்துகின்றேன்" என்றார்.

மேலும், சிறப்பு அதிதியான மட்டக்களப்பு தாண்டவன்வெளி தூய காணிக்கை அன்னை ஆலயப் பங்குத் தந்தை அருட்பணி. ரமேஷ் கிறிஸ்டி அடிகள் தனதுரையில், "இருதயநாதன் ஆசிரியரின் மாணவனாக நான் மட்/புனித மிக்கேல் கல்லூரியில் படித்தேன். எல்.எஸ் பாடம். ஒருநாள் என்னை அழைத்தார். எனக்கு ஒரே நடுக்கம், உடல் உதறியது. அவரது பார்வை எனது ஷூவில் நிலைகுத்தி நின்றது. என்ன ஷூ லேஸ் அவிழ்ந்துள்ளதே உமக்குத் தெரியாதா?" என்றார். இன்றும் அதை என்னால் மறக்க முடியாதுள்ளது. இவரது கம்பீரம், நடை, உடை, பாவனை என்னை மிகவும் கவர்ந்த ஒன்று. உண்மையிலே கூறப்போனால் எனது Roll Model ஆக உள்ளார். அவரது பேச்சுத் திறன், நாடக, குறுந்திரைப்படம், கூத்து, கவிதை இவைகள் என்னைக் கவர்ந்துள்ளன. என்னை மாத்திரமல்ல இந்த மண்டபம் நிறைந்த கூட்டத்தில் பலர் புனித மிக்கேலின் பழைய மாணவர்கள். மிக்க மகிழ்ச்சியாக இருக்கின்றது. எனது பங்கினைச் சேர்ந்த என் ஆசான் கலைக்கோட்டன் இருதயநாதன் அவர்களை நெஞ்சார வாழ்த்துகின்றேன்" என்றார்.

இந்நிகழ்வின் பிரதம அதிதி. மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. மாணிக்கம் உதயகுமார் தமதுரையில், எம்மத்தியில் வாழும் சிறந்த இலக்கியப் படைப்பாளி கலைக்கோட்டன் அ. இருதயநாதனுக்கும் எனக்குமான தொடர்பு 1987 ஆண்டு ஆரம்பமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

1987ஆம் ஆண்டு நான் இளம் பட்டதாரி ஆசிரியராக மகிழவட்டவான் வித்தியாலயத்தில் கடமையாற்றும்போது இருதயநாதன் சேர் அவர்கள் நரிப்புல்தோட்டம் பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றினார். தினமும் நாம் இருவரும் சைக்கிள்களிலேதான் செல்வோம். அப்போது இரண்டு ஆறுகள். வாய்க்கால்களைக் கடக்க வேண்டும். நாம் சைக்கிளைத் தூக்கித் தோளில் சுமந்தபடி சென்றோம். அந்த நினைவுகளை இப்போது மீட்டுப் பார்க்கின்றேன். மிகவும் சந்தோசமாக இருக்கின்றது. பாடசாலைக் கல்விப் பணியுடன் சமூகப் பணிகள், கலைப்பணிகள் எனச் சிறப்புடன் செய்தவர். சிறப்பாகக் கூத்துக் கலையை மிக மிகப் பின்தங்கிய பிரதேசங்களில், போர்ச் சூழலிலும் மேற்கொண்டிருந்தார். இவரது வெளியீட்டு விழாவில் கலந்துகொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்" என்று கூறினார்.



மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரா சசி மகேந்திரன் அவர்கள் கலைக்கோட்டனைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

இந்நிகழ்வில் நூலாசிரியர் கலைக் கோட்டன் அ. இருதயநாதன் அவர்கள் ஏற்புரை வழங்கினார். இரா. கலைவேந்தன் அவர்கள் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.

■ **திருமதி. கிறேஸ் ஆஞ்சலா மணிராஜ் -**

தொண்டன் வாசகர்களுக்கு இன்னுமொரு போட்டி நிகழ்ச்சியினை இம்மாதம் முதல் அறிமுகம் செய்கின்றோம். இது ஒரு வினாவிடைப் போட்டி, தை மாதம் முதல் தொண்டன் சஞ்சிகையில் வெளியிடப்பட்டுவரும் புனிதர்களை அறிவோம், சமூக அக்கறை ஆண்டிற்கான சிறப்புக் கட்டுரை மற்றும் ஏனைய விடயங்களிலிருந்து வினாக்கள் எடுக்கப் பட்டுள்ளன. விடைகளை இத்தாளிலேயே எழுதி அனுப்பிவைக்கவும். வெற்றிபெறும் மூன்று போட்டியாளர்களுக்கு தலா ரூபா. 500/= பரிசாக வழங்கப்படும். போட்டியில் கலந்து வெற்றி பெற வாழ்த்துக்கள்.

(ஆ+ர்)

## வினாவிடைப் போட்டி இல. - 01

1) "இன்றைய உலகில் திருச்சபை" எனும் சுற்றுமடல் எப்போது வெளியிடப்பட்டது?
........................................................................

2) "ஆறுதலளிக்கும் புனித கன்னிமரியாள்" திருவுருவப்படம் எந்த இடத்தில் முதன் முதல் காணப்பட்டது? ........................................................................

3) 260ம் வருடம் தை மாதம் 14ந் திகதி இறைபதமடைந்த புனிதரின் பெயர் யாது?
........................................................................

4) ஜனவரி எனும் வார்த்தை 'JANUS" என்ற வார்த்தையிலிருந்து வருகிறது. இது எக் கடவுளைக் குறிக்கும்? ........................................................................

5) சோல்பரி ஆணைக்குழு நியமிக்கப்பட்ட வருடம் எது? ........................................

6) திருத்தந்தை பிரான்சிஸ் நவம்பர் 24, 2013 அன்று வெளியிட்ட மடலின் பெயர் என்ன?
........................................................................

7) "நீ செய்வது அனைத்தையும் பணிவோடு செய்" காணும் திருவிவிலியப் பகுதி யாது?
........................................................................


8) மன்னார் மறைமாவட்ட ஆயரின் பெயரைத் தருக?
........................................................................

9) புனித தோமஸ் அக்குவினாஸ் தமது 11வது வயதிலே உயர் கல்விக்காக எங்கு சென்றார்?
........................................................................

10) "பிள்ளைகளைத் தண்டித்துத் திருத்தத் தயங்காதே" எனக் காணும் திருவிவிலியித் திருவசனத்தைத் தருக?
........................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**உதாரணமாய் விளங்குங்கள் :**

பெஞ்சமின் பிராங்க்ளின் ஃபிலடெல்ஃபியாவின் வீதிகளில் வெளிச்சம் நிரப்ப உள்ளூர் நிர்வாகத்திடம், விளக்குகள் அமைக்க வேண்டினார். அவர்கள் ஏற்க வில்லை. பிறகு, தன் வீட்டு வாசலில் பிரமாண்டமான விளக்கை அவரே அமைத்துக் கொண்டார். அதன் ஒளியைப் பார்த்து மக்கள் உள்ளூர் நிர்வா கத்தை வற்புறுத்தி தெரு விளக்குகள் அமைக்கச் செய்தனர். உதாரணமாய் விளங்குவதன் மூலமே ஊருக்கே வழிகாட்ட முடியும். உங்கள் செயலின் விளை வைப் பார்த்தே உலகம் உங்களைப் பின்பற்றும்.

**இலக்குகளின் உருவாக்கம்:**

கனவுகளை இலக்குகளாக மாற்றுவதும், இலக்குகளை எட்டுவதும் நடை முறையில் சாத்தியமா என்று கேட்டான் அந்த இளைஞன். பெரியவர் பதில் பேசாமல் தோட்டத்திற்குத் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருந்தார். பொறுமை யிழந்த இளைஞன் "பதில் தெரியவில்லையா?" என்றான். "பதில் சொல்லி விட டேன்" என்றார் அவர். "செடிகளில் பூத்திருக்கும் பூக்களே கனவுகள். செடிகளை வேலியிட்டு வளர்ப்பதே இலக்குகளின் உருவாக்கம். கனவுகள் இப்படித்தான் மலரும்" என்றார் அவர்.

- ஜே.கே.இரத்தினராஜா -

# நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்



**ஜெ**ர்மனிய அரசாங்கம் தனது தபால் முத்திரை ஒன்றிலே நமது தமிழ்ப் பெரியார் ஒருவரின் உருவத் தைப் பொறித்து வெளியிட்ட தென்றால் நீங்கள் ஆச்சரி யப்படுவீர்கள். ஆனால், இது உண்மை. அத்தகைய புகழுக்குப் பாத்திரமானவர்தான் நல்லூர் சுவாமி ஞானப் பிரகாசரவர்கள். வடமொழி, தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் நன்கு கற்றிருந்த சுவாமியவர்கள் எழுபது மொழிகளைப்பற்றி அறிந்திருந்தார்கள்.

"தமிழர் பூர்வீக சரித்திரம்", "யாழ்ப்பாணத்தரசர்", "யாழ்ப்பாணச் சரித்திரம்", "இந்திய நாகரிகம்", "தமிழர் வரலாறு", "தமிழரிடையே சாதி பிறந்த முறை", "தமிழ ரின் பூர்வ இருப்பிடம்", "தமிழ் அமைப்புற்ற வர லாறு", "தமிழ்ச் சொற் பிதிர்", "தமிழ்த் தாதுக் கள்", "மொழிக் குடும்பம்", "தருக்க சாஸ்திரம்" என்பன சுவாமிய வர்களின் அரிய நூல்களாகும். ஒரு மொழியின் ஆராய்ச்சி வேலைகளில் அகராதி தொகுப்பதும் ஒரு துறையாகும். மிகக் கடினமான இத்துறையிலே யாழ்ப்பாணம் என் றுமே முன்னணியில் நின்றிருப்பதை எவருமே ஒப்புவர். இந்த அகராதி வரிசை யிற் புதியதொரு பாதையை வகுத்துச் "சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதி" என்ற பெரும் பணியைச் செய்த இத்தொண்டே சுவாமியவர்களைத் தமிழரும், மேலைநாட்டாரும் என்றென்றும் நினைவில் வைத்திருக்கப்போதுமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொண்டனின் சில நிமிடங்கள்...



இம்முறை தொண்டனின் சில நிமிடங்கட்காக நாம் சந்தித்தது திருமதி. கிறிஷானா ஷர்மிளா ரஞ்சித்குமார் அவர்களை. மரணிக்கப்பட்ட அருட்தந்தை. சந்திரா பெர்ணான்டோ அடிகளாரின் சகோதரியின் மகளான இவர், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கையின் சிரேஷ்ட நடனத்துறை விரிவுரையாளரும், துறைத் தலைவருமாவார்.

இவரிடம், இவரது கல்விப்பயணம் பற்றி வினவினேன். இவர் தனது பாலர் வகுப்பில் இருந்து க.பொ.த. (உ.த) வரை மட்/புனித சிசிலியா மகளிர் கல்லூரியில் கற்றதாகக் குறிப்பிட்டார்.

நடனத்துறை ஈடுபாடு பற்றிக் கேட்கையில் சுவாரசியமாகப் பதிலிறுத்தார். க.பொ.த (சா.த)ப் பரீட்சையில் நடனத்தை ஒரு பாடமாகக் கற்ற இவர் 5ம் வகுப்பில் இருந்தே திருமதி. கமலா ஞானதாஸ் என்ற ஆசிரியையிடம் நடனத்தை முறையாகப் பயின்றதாகக் குறிப்பிடுன்றார். பாடசாலையில் திருமதி. வசந்தி நேரு அவர்களிடம் நடனம் பயின்றுள்ளார்.

பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைப்புச் செய்யப்பட்ட 'திருச்சி கலைக்காவிரி' யில் நடனப் பட்டப்படிப்பைப் பூர்த்திசெய்து 1999ல் கவின் கலைமானி (BFA) பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். 2000ஆம் ஆண்டு தொடக்கம் மட்டக்களப்பு விபுலானந்தா இசை நடனக் கல்லூரியின் வருகை தரு விரிவுரையாளராகப் பணியாற்றினார். பின்னர் நடனத் துறையில் முதுகலைமானி (MFA) பட்டத்தையும் திருச்சி கலைக்காவிரியில் பெற்றுக் கொண்டார்.

2004ம் ஆண்டு கிழக்குப் பல்கலைக் கழகத்தால் உள்வாங்கப்பட்ட சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கை நிறுவகத்தில் நிரந்தர விரிவுரையாளராக 2008ல் இணைந்து கொண்டார். நடனத்துறையில் கொண்ட அயராத காதல் காரணமாகத் தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் இணைந்து 39 மாதகால ஆராய்ச்சியின் பயனாக 2014 ஆகஸ்ட் மாதம் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். இவ்வாறு நடனத்துறையில் கலாநிதிப்பட்டம் பெற்றவர் மூவர் மட்டுமே; அவர்களில் மட்டக்களப்பில் முதலாவது நபர் இவர்தான்.

இவற்றைத் தவிர நடனத்துறையில் நீங்கள் செய்த சாதனைகள் என எவற்றைக் குறிப்பிடுவீர்கள்? என்று கேட்டபோது மிகவும் அமைதியாகப் பதிலளித்தார்.

பாஸ்கா நிகழ்வுகளில் நடனங்களைப் பழக்கி வழங்கியுள்ளார்; ஒளிவிழாக்களில் பத்திற்கு மேற்பட்ட நடன நிகழ்ச்சிகளை மேடையேற்றியுள்ளார். இவற்றைத் தவிர 'மும்மதம்' என்ற நாட்டிய நாடகம், 'பெத்லகேம் குறவஞ்சி', 'வயோதிபரைப் பேணுவோம்', 'யோசப்வாஸின் வாழ்க்கை வரலாறு' போன்ற நாட்டியங்கள் இவரின் பெயரைப் பறைசாற்றியுள்ளன. இவற்றில் இவருக்குப் பிடித்தது 'யோசப்வாஸின் வரலாறு' ஆகும். இதனைத் தொடர்ந்து புனிதர்களின் வாழ்க்கை வரலாறுகளை நடன வடிவில் கொண்டுவர மிகவும்...

தொடர் 19ம் பக்....

– ஆழியோன் –




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



**பொ**துவாக நாம் வயிறு நிறைய சாப்பிட்ட பின்பு என்ன செய்வோம்? குட்டித் தூக்கம் போடுவோம்.அல்லது ஒரு கப் தேநீர் அருந்துவோம். ஆண்களை எடுத்துக் கொண்டால், ஒரு சிகரெட் அடிப்பார்கள். ஆனால், நம்மில் பலர் உணவு உட்கொண்ட பின் குளிப்பார்கள். இதுதான் இருப்பதிலேயே மிகவும் மோசமான பழக்கம் மற்றும் உடலுக்கு கேடு விளைவிக்கும் பழக்கமும் கூட.

நீங்கள் உங்கள் தாத்தா பாட்டியுடன் இருந்தால், சாப்பிட்ட உடனேயே உங்களைக் குளிக்க விடமாட்டார்கள். சாப்பிட்டதும் குளிக்கக்கூடாது என்று பலமுறை சொல்வதைக் கேட்டிருப்பீர்கள். அவர்களிடம் ஏன் என்று காரணம் கேட்டால், நல்லதல்ல என்று மட்டும் சொல்வார்கள். இதற்கு பின் எந்த ஒரு ஆன்மீக காரணமும் இல்லை. ஆனால், அறிவியல் காரணம் மட்டும் உள்ளது.



## சாப்பிட்டதும் ஏன் குளிக்கக்கூடாது?

குளிக்கும்போது நம் உடலின் ஒவ்வொரு செல்லும் புத்துணர்ச்சியடையும். கடந்த 24 மணி நேரத்தில் நம் சருமத்தில் சேர்ந்த அழுக்குகள் வெளியேற்றப்படும். இப்படி வெளியேற்றும் போது, உடலினுள் உள்ள செல்கள் மிகவும் ஆற்றலுடனும், புத்துணர்வுடனும் இருக்கும். இதனால்தான் குளித்து முடித்ததும் பசி ஏற்படுகிறது.

ஏன் சாப்பிட்டதும் குளிப்பது வீண்? உணவு சீரணிக்க நொதிகள் தேவை. சாப்பிட்டவுடன் குளித்தால் உடலில் உண்டான குளிர்ச்சித் தன்மையால் நொதிகள் சுரக்காது. இதனால் அஜீரணத்திற்கு வழி வகுக்கும். எனவே, சாப்பிட்ட பின் குளிக்கக் கூடாது. குளித்து முடித்த பின் உணவு உட்கொள்ளும் போது, உடலானது உணவில் உள்ள சத்துக்களை முற்றிலும் உறிஞ்சி, உடலுக்குத் தேவையான ஆற்றலைப் பெற்றுக்கொள்ளும். உணவு உட்கொண்ட உடனேயே குளித்தால், செரிமான மண்டலத்தின் செயல்பாடு குறைந்து, மலச்சிக்கல் மற்றும் இதர வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளால் அவஸ்தைப்படக்கூடும்

• • •

வெஜிடபிள் சமோசா மொறுமொறுப் பாக இருக்க, அவற்றைத் தயாரித்தவுடன், ஒரு தட்டில் வரிசையாக வைத்து, ஃப்ரிட்ஜில் 1/2 மணி நேரம் வைத்து எடுத்து, சற்று நேரம் கழித்து எண்ணெயில் பொரிக்க, க்ரிஸ்பியாகவும் சுவையாகவும் இருக்கும்.





• • •

கொண்டைக்கடலை சுண்டலை ஊறப் போட மறந்து விட்டால், நோ கவலை! எண்ணெய் விடாமல் நன்றாக வறுத்து, பிறகு குக்கரில் வேக வைத்தால் சுண்டல் தயார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## நோபல் அமைதி விருது -
### முதுபெரும்தந்தை சாக்கோவுக்கு

ஈராக்கில் பணியாற்றிவரும் கல்தேய வழிபாட்டு முறை முதுபெரும் தந்தை லூயிஸ் இரஃபேல் சாக்கோ அவர்கள், 2018ம் ஆண்டுக்குரிய நோபல் அமைதி விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளார் என்று ஆசிய செய்தி கூறியுள்ளது.

கிர்குக் பேராயராகவும், கல்தேய வழிபாட்டு முறை முதுபெரும் தந்தையாகவும் பணியாற்றிவரும் சாக்கோ அவர்கள், ஈராக் நாட்டிலும், மத்திய கிழக்குப் பகுதியிலும் அமைதியைக் கொணர மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்காக கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர் இன்னும் ஏனைய மதத்தினர் அனைவரும் இணைந்து, இந்த விருதுக்கு அவரைப் பரிந்துரை செய்துள்ளனர்.

தான் இந்த விருதைப் பெறுவது முக்கியமல்ல, ஆனால், இந்தப் பரிந்துரையின் வழியே, ஈராக் நாட்டில் நிகழும் கொடுமைகள் உலக சமுதாயத்தின் கவனத்திற்கு மீண்டும் கொண்டு செல்லப்படுவது முக்கியம் என்று, முதுபெரும் தந்தை சாக்கோ அவர்கள் ஆசிய செய்திக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

முதுபெரும் தந்தை சாக்கோ அவர்களை இந்த விருதுக்குப் பரிந்துரைக்க, பிரான்ஸ் பாராளுமன்றத்தின் 125 உறுப்பினர்கள் ஒப்புதல் அளித்துள்ளனர் என்று ஆசிய செய்தி மேலும் கூறியுள்ளது.

ஆதாரம் : AsiaNews / *வத்திக்கான் வானொலி*

## இலங்கையில் ஒழுங்குமுறை காக்கப்படுமாறு கிறிஸ்தவர்கள்...



இலங்கை புதியதோர் உள்நாட்டுப் போருக்குச் செல்லும் ஆபத்தை எதிர்கொள்ளும் இவ்வேளையில், நாட்டில் சட்டம் ஒழுங்கு முறைகளை எவ்வளவு விரைவில் கொண்டுவர இயலுமோ, அவ்வளவு விரைவில் கொண்டுவருமாறு, அந்நாட்டின் பல்வேறு மனித உரிமைக் குழுக்களும், கிறிஸ்தவ கழகங்களும், இலங்கை அரசை வலியுறுத்தியுள்ளன.

சிங்கள புத்த மதத்தவர் ஒருவர் இறந்ததைத் தொடர்ந்து, பழிவாங்கும் நடவடிக்கையாக, கண்டியில் முஸ்லிம் கடைகளும், வீடுகளும் தீயிட்டு கொளுத்தப்பட்ட இன வன்முறைக்குப் பின்னர், அந்நாடு புதியதோர் உள்நாட்டுப் போரின் விளிம்புக்குத் தள்ளப்பட்டுள்ளது எனவும், கிறிஸ்தவ கழகங்கள் எச்சரித்துள்ளன.



மேலும், இவ்வன்முறையைத் தொடர்ந்து, அறிக்கை வெளியிட்டுள்ள இலங்கைக் கத்தோலிக்க ஆயர்கள், கடும் மோதல்களை மேலும் தவிர்க்கும்பொருட்டு, உரையாடல் மற்றும் புரிந்துணர்வில், அனைத்து அரசியல் மற்றும் பொது மக்கள் தலைவர்கள் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

ஆதாரம் : AsiaNews / வத்திக்கான் வானொலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் காலம் நமக்கு பாடங் கற்கத் தந்த ஒரு வாய்ப்பு! இதையும் நாம் கிரகிக்கத் தவறினால், பெரும்பான்மையல்ல நாமே நமக்குக் குழி பறிக்கிறவர்கள்தான்! குறிப்பாகக் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அதிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சி இப்போதும் கூட தன் அறிவைத் திறந்து வைக்கக் காணோம் என்றுதான் தோன்றுகிறது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பைப் புலிகள்தான் உருவாக்கினார்கள். அதை ஒரு கட்சியாக அவர்கள் உருவாக்கவில்லை. மாறாக, ஒரு அமைப்பாகத்தான் உருவாக்கினார்கள். தமக்கெதிராக நின்றவர்களையும் கூட அவர்கள் அதில் இணைத்துக் கொண்டார்கள். மாற்றானுடன் இணைந்து காட்டிக் கொடுத்தவர்களை மட்டும் விட்டு விட்டனர். கூட்டமைப்பு உருவாகி தேர்தல்களில் வென்று தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக தம்மை மக்கள் அடையாளப்படுத்தியவுடன் கட்சி என்கின்ற குறுகிய வட்டத்தை விட்டு வெளியெறி தமிழ்த் தேசிய கூட்டமைப்பை ஓர் தனிக் கட்சியாக ஏற்படுத்தியிருக்க வேண்டும். அதுதான் தமிழினத்திற்கு அவர்கள் செய்திருக்கக் கூடிய மாபெரும் பணியாக இருந்திருக்கக் கூடும். ஆனால், அது நடக்கவில்லை! குறிப்பாக தமிரசுக் கட்சி தனது கட்சி என்கின்ற அடையாளத்தை விட்டுவிடத் தயாராக இருக்கவில்லை. இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு பொதுக் கட்சியாக, தமிழனை அடையாளப்படுத்தும் ஒரே கட்சியாக உருப்பெற முடியவில்லை. போதாக் குறைக்கு மக்களுக்கு அதிகம் பரிச்சயமுள்ள வீட்டுச் சின்னத்தை முன்னிறுத்தி அதையே பிரதானப்படுத்தும் முயற்சியையே அது எப்போதும் மேற்கொண்டு வந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கப்பட்டபோது அறிமுகப்படுத்திய உதயசூரியன் சின்னம் ஆனந்த சங்கரி என்கின்ற வில்லங்கத்தில் மாட்டுப்படும் வரை அது தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சின்னமாக தோற்றம் பெற்றிருந்தது. இதையொரு வாய்ப்பாக மாற்றிக் கொண்ட தமிழரசுக் கட்சி தனதுசின்னத்தை ஒரு பொதுச் சின்னமாக உருவாக்கி அதன் மூலம் தனது பலத்தை அதிகரிப்பதால் பலத்த முனைப்புக் காட்டியது. தேரிதல்களின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பென்றால் வீட்டுச் சின்னம் மக்களின் தெரிவாகியது. இது அவர்களுக்கு, அவர்களது தலைமைத்துவங்களுக்கு பலத்த தலைக்கனத்தையும் எதிர்கால இருப்பைத் தக்க வைக்கும் தந்திரமாகவும் தோன்றியது. இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு அரசியல் கட்சியாகப் பதிவு செய்ய அதன் தலைவர்கள் முன்வரவில்லை. ஒருவேளை விடுதலைப் புலிகள் இருந்திருந்தால் அதுதான், அதாவது தமிழர்களை அடையாளம் செய்யும் ஒரே கட்சிதான் தமிழ்ப் பிரதேசங்களில் ஆட்சி செலுத்தியிருக்கும். அவர்கள் இல்லாத நிலையில் அதைக் கூட தமிழரசுக் கட்சி தனக்குச் சாதகமாக்கிக் கொண்டது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் ஏனையவை தமிழ்க் காங்கிரஸ் தவிர எல்லாம் போராட்டக் குழுக்கள். அவை தாமாக உருப்படியான எதையும் தமது போராட்டக் காலத்தில் முன்னெடுத்திருக்கவில்லை. இருந்தும் ஒரு கட்டத்தில் அவை தடம் மாறிப் போனாலும் தம் தவறான பாதையுணர்ந்து திருந்தியவை. இதனாலேயே அவைகளுக்குப் புலிகள் மன்னிப்பளித்திருந்தார்கள்.

இருந்தும் அவைகளால் தமிழ் மக்கள் மத்தியில் போதுமான செல்வாக்கை ஈட்டிக் கொள்வதென்பது சிரமமாக இருந்தது. இதனால் த.தே. கூட்டமைப்பினூடாக அவைகளும் பொது வேலைத் திட்டத்தில் இணைந்து தங்களது அரசியல் அனுபவங்களினூடாகத் தம்மால் ஆன பங்களிப்பைச் செய்ய முன்வந்தார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. இதையெல்லாம் தமிழரசுக் கட்சி தனக்கு ஆதாயமாக்கிக் கொண்டதேயல்லாமல், புலிகளின் எதிர்பார்ப்பை அது மேற்கொண்டு செல்லவில்லை. கூட்டமைப்பின் தலைவர் அவர்கள் ஒருக்காலும் புலிகளுக்கு ஆதரவாக இருந்ததில்லை. ஏனைய தமிழரசுக் கட்சித் தலைவர்களும் பெரிய ஆதரவு தந்ததில்லை. பயம் என்கின்ற அம்சம் அவர்களையெல்லாம் ஆதரவாகக் குரல் தரப் பண்ணியதேயல்லாமல் மனத்தளவால் அல்ல. அப்படியிருந்திருப்பின் தமது கட்சியை மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

முன்னிறுத்தி இவ்வாறு அவர்கள் செயற்பட்டிருக்க மாட்டார்கள். த.தே. கூட்டமைப்பு மக்கள் மத்தியில் பெற்றிருந்த உணர்வு பூர்வமான ஆதரவு அவர்களுக்கு தலைக்கனத்தை ஏற்படுத்தி விட்டது. தமிழரசுக் கட்சியில்லாது த.தே. கூட்டமைப்பு இல்லை என்கின்ற மமதை அவர்களுக்கு ஏற்பட்டு விட்டது. இதனால், இந்தத் தேர்தலின்போது நாம் தும்புக்கட்டையைக் கூட வீட்டுச் சின்னத்தில் இறக்கினால் அது வெல்லும் என்று பேசுகின்ற அளவுக்கு அவர்கள் போய் விட்டார்கள். அதனோடே கூட்டிணைந்த ஏனைய சிறுகட்சியின் தலைவர்களையெல்லாம் உதாசினம் செய்து தன்னிச்சையாகத் தமிழரசுக் கட்சியே அனைத்து முடிவுகளையும் மேற்கொண்டபோது, கூட்டமைப்பு சிதறுண்டு போகத் தொடங்கியது. இதை அவர்கள் ஒரு பொருட்டாகக் கொள்ளவில்லை. தமிழ் மக்களது உணர்ச்சிகளின் மீது தொடர்ந்தும் பயணிக்க முடியும் என்கின்ற மனநிலையில் அது இருந்தது. பிரிந்த கட்சிகள் தமக்குள் இணைந்து அமைப்புக்களை உருவாக்கிப் போட்டியில் இறங்கியபோது அலட்சியமாக அது கணக்குப் போட்டது. தமிழ் மக்கள் தங்களை விட்டால் யாரையும் திரும்பிப் பார்க்க மாட்டார்கள் என்ற மிதப்பில் வடகிழக்கில் தமிழ்ப் பிரதேச அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும் நமதே என்றிருந்தவர்களை மக்கள் தலையில் குட்டி அமர்த்திவிட்டார்கள். ஏதோ தமிழ்த் தேசியம் நமதே என்றிருந்தவர்களுக்குத் தமிழ்த் தேசியம் ஒன்றும் உங்கள் வீட்டுச் சொத்து அல்ல என்பதை வில்லங்கமாகப் புரிய வைத்த விட்டார்கள். இப்போது முக்கிய உள்ளூராட்சி மன்றங்களை அமைக்கக் கௌரவமாக கையேந்தி நிற்கின்றார்கள். அதாவது தமிழ்த் தேசியத்தை ஏற்றுக் கொண்டவர்கள் நம்மோடு சேரலாம் என்று தூது விடுகின்றார்கள் வீட்டுச் சின்னத்தினர். அவர்களே இப்போது தமிழ்த் தேசியம் தமிழர்களின் ஒரு பொதுவான சொத்து என்பதை ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள் என்பதற்கு இதைவிட வேறு என்ன உதாரணம் தேவை?

இதையும் ஏற்றுக்கொண்டு அனைவரோடும் இணைந்து போக இன்னும் அதன் தலைமைகள் முன்வரவில்லை. இது வெளிவரும்வேளையில் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடர் நடந்து முடிந்திருக்கும். அது ஆரம்பிக்கு முன்னர் அதன் ஆணையாளர் அல் ஹுசைன் அவர்கள் இலங்கையின் பொறுப்புக் கூறல் விடயத்தில் மாற்று வழிகள் தேவை என்று தனது இடைக்கால அறிக்கையில் கூறியிருந்தார்கள். அதாவது தற்போது பயன்படுத்தம் வழிமுறைகளை விடச் சற்று கடுமையான வழிவகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே அவரது கருத்தாக இருந்தது. வழமைபோல தமிழரசுக் கட்சி, இது வரை அரசாங்கத்துக்கு முட்டுக் கொடுத்து அதற்குச் செயற்படும் கால எல்லையை நீடித்துக் கொடுப்பதில் முக்கிய ஆதரவைத் தந்ததுபோல இப்போதும், தனியாகக் கூடி மாற்று வழியொன்றும் தேவையில்லை, ஏற்கனவே தீர்மானித்ததைச் செய்யச் சொன்னால் போதும் என்ற தீர்மானமும் நிறைவேற்றி அதனை வலியுறுத்த ஜெனிவா செல்லவும் தயாராகி விட்டது. மீண்டும் காட்டிக் கொடுப்புக்கு அது தயாராகி விட்டது.

இப்போதைய தேசிய அரசாங்கம் கவிழ்ந்து விட்டால் கிடைப்பதும் கிடைக்காமற் போய்விடுமே என்கின்ற மாயைக்குள் அதன் தலைவர்கள் நன்கு சிக்கிக் கொண்டு இருக்கிறார்கள் அல்லது சிக்க வைக்கப்பட்டு (மூளைச் சலவை செய்யப்பட்டு) இருக்கிறார்கள் போன்று தோன்றுகின்றது. ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தால் தமிழீழம் மலரும் என்று மார்தட்டிக் கூறும் ஜாம்பவான் சம்பந்தன் அவர்கள் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு எதுவுமே உருப்படியாகப் பண்ணாத, தமிழ்ப்பகுதிகளை தொடர்ந்தும் கையகப்படுத்தி வரும் தேசிய அரசுக்கு ஏன் நிபந்தனையில்லாத முட்டுக் கொடுக்க வேண்டும்? ராஜபக்ஷ வந்தால்தான் தமிழர் நாடும் தனிநாடுதான் கிடைத்துவிடப்போகிறதே? அது பெரிதில்லையா? அல்லது அது விடுதலைப் புலிகளின் கோரிக்கையாக இருந்ததால் தனி நாடு கிடைத்துவிட்டால் புலிகள் வென்றதற்குச் சமனாகி விடும் என்று நினைக்கின்றாரா? இந்த அரைகுறையாக மூக்குடைபட்டு நிற்கின்ற நிலையிலும் தமிழர் தரப்புக்களை ஒன்று கூட்டி பொது வேலைத் திட்டம் பற்றிப் பேசாது தன்னிச்சையாக தமிழர் தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் தமிழரசுக் கட்சிக்கு யார் கொடுத்தது?

நம்மத்தியில் படித்தவர்கள் என்றும், மதத் தலைவர்கள் என்றும், சமூக சிந்தனையாளர்கள் என்றும் அடையாளம் காட்டிக் கொண்ட தேர்தல் காலத்தில் மக்கள் கடமை என்ன என்பதை எடுத்துச் சொல்லிப் பெரும் பணியொன்றைச் செய்துவிட்டதாக நினைப்பவர்களும், தேர்தல் முடிவையடுத்து தமிழ் தரப்புக்கள் பேதங்களை மறந்து ஒன்றுபட வேண்டும் என்று அலறுபவர்களும் யார் பேதம் வளர்த்து நிற்கின்றார்கள் என்ற உண்மையைக் கண்டுணர்ந்து உரிய தரப்பார்க்கு அறிவுரை கூறும் ஆசான்களாக, மதியுரை குழுவாக, அனைத்துத் தரப்பாரதும் கருத்துக்களைத் திரட்டி அதன் வழியே பொது வேலைத் திட்டத்தின் அடிப்படையில் பணிகளை முன்னெடுத்தச் செல்லப் பகிரங்கமாக வழிகாட்ட முன்வராவிட்டால் தமிழினம் வாழவும் இடமில்லாமல், புதைக்கவும் நிலமில்லாமல் போகின்ற நிலையைத் தான் உருவாக்கித் தரப்போகிறோமா? ■



குறும்பா

நிலா தமிழின் தாசன்

## நடிப்பு

ஐயாமார் ஊர்களுக்குள் வருகை
ஆரெவர்க்கும் கூம்புமவர் இருகை
பொய்யான வெளிவேசம்
போட்டுவரு மிவர் நடிப்பு
மெய்யாகத் தேர்தல் ஓட்டுப் பெறுகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### இனக்கலவரங்களும் அமைதிச் செயற்பாடுகளும் :

திருச்சபையானது இன்று எதிர்நோக்கும் மிக முக்கியமான பிரச்சினை இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வையும், சமாதானத்தையும், ஒற்றுமையையும் ஏற்படுத்துவதாகும். இலங்கை 1948ல் ஒரு சுதந்திரமான ஜனநாயக நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து, பெரும்பான்மையான சிங்களப் பௌத்த மக்கள் இலங்கையை ஒரு பௌத்த நாடாக்குவதற்குப் பல முயற்சிகளை மேற்கொண்டு வந்தனர். தமிழ், முஸ்லிம் மக்கள் சிறுபான்மையாக இருப்பதால் அவர்களின் உரிமைகளையும் பறித்து அவர்களை அடக்கி, ஒடுக்கி, முயற்சிகள் பலவற்றை மேற்கொண்டு வந்தனர். அரசியல் வாதிகளும், கட்சிப் பிரமுகர்களும் மக்களின் ஆதரவைப் பெற இத்தகைய முயற்சிகளுக்கு ஆதரவினை வழங்கி வந்தனர்.

இவ்வாறான சூழ்நிலையில் பௌத்த சிங்கள மக்களின் ஆசைகளை நிறைவு செய்யும் நோக்குடன் 1951ம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உருவாகியது. 1956ல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் பௌத்த சிங்கள வெறியைப் பரப்பி S.W.R.D பண்டார நாயக்கா தலைமையில் தேர்தல் பிரச்சாரத்தை மேற்கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது வெற்றி பெற்றது. இதன் மூலம் அரசாங்கத்தை அமைத்து அடுத்தநாளே "சிங்களம் மட்டும்" மசோதாவைப் பாராளுமன்றத்திற்குக் கொண்டு சென்று, சிறுபான்மையினரின், குறிப்பாகத் தமிழரின் எதிர்ப்பிற்கு மத்தியில் அதை நிறைவேற்றியது. இதன்மூலம், சிங்களம் மட்டுமே அரச கரும மொழியாக்கப்பட்டது. இதனால், சிங்களம் தெரியாதவர்கள் அரச பதவிகளில் இருந்து விலக்கப்பட்டார்கள். இதனால், தமிழர்களுக்கு அரச உத்தியோகங்கள், பதவி உயர்வுகள் கிடைப்பது தடைசெய்யப்பட்டது. தென் பகுதியிலுள்ள பல தமிழ்ப் பாடசாலைகள் சிங்களப் பாடசாலைகளாய் மாறின. தமிழ் இளைஞர்களும் பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவது மட்டுப்படுத்தப்பட்டது. இதனால், தமிழ் மக்களும், தமிழ் இளைஞர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இவைகளே இலங்கை இனப்பிரச்சினையின் இனமோதல், கலவரங்களுக்கு ஆரம்பமாக அமைந்தன.

தமிழர்களின் உள்ளக் குமுறல்களையும், எதிர்ப்புக்களையும் தமது உரிமைகளுக்காக அவர்கள் மேற்கொண்ட அகிம்சைப் போராட்டங்களையும், அரசு பெரும்பான்மை சிங்கள மக்களின் பலத்தால் சிங்களக் காடையர்களைக் கொண்டு அடக்கி ஒடுக்கியது. இவை நாளடைவில் கலவரங்களாய் மாறி 1957, 1970, 1977, 1983 களில் மோதல்களாய்த் தோன்றின. இதன் விளைவாய் பெருமளவிலான உடைமை மற்றும் பொருள் சேதங்கள், தொழில்துறைப் பாதிப்புக்கள், உயிர் அழிவுகளையும் ஏற்படுத்தின. இதனால், அரசிடமிருந்து ஆதரவு, நீதி, நியாயம் கிடையாதெனக் கண்ட தமிழ் இளைஞர்கள் தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள ஆயுதம் ஏந்திப் போராட நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

இலங்கையில் ஏற்பட்ட இத்தகைய தமிழ் – சிங்கள் பிரச்சினையானது திருச்சபைக்குள் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. ஏனெனில், பெரும் அளவிலான சிங்களவர்களும், தமிழர்களும் கிறிஸ்தவர்களாய், திருச்சபையின் பிள்ளைகளாய், ஒரே தாயின் பிள்ளைகளாய் இருந்தனர். இம்மோதலானது திருச்சபைக்குள் தமிழ்க் கிறிஸ்தவர்கள், சிங்களக் கிறிஸ்தவர்கள் எனும் பிரிவினையை ஏற்படுத்தியது. இருப்பினும் திருவிவிலியச் சிந்தனைகளும், கிறிஸ்தவ விழுமியங்களும், கண்ணோட்டமும், வன்செயல்களையும், இம்சையையும், போர் மோதல்களையும் என்றும் எதிர்த்தன. கிறிஸ்துவையும், அவரது படிப்பினைகளையும் பின்பற்றும் இவ்விரு பிரிவினரும் மனித உரிமைகளையும், கிறிஸ்துவையும், அவரது போதனைகளையும் பின்பற்றும் காரியங்கள் தவிர ஏனையவற்றில் ஈடுபடவில்லை. மாறாக, போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பாரபட்சமின்றி உதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

செய்வதில் திருச்சபை நாட்டம் காட்டியது.

மேலும், திருச்சபையானது சிங்களக் கிறிஸ்தவர்களுக்கும், தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கும் தாயாய் இருந்து, ஒரே இனத்தின் முக்கியத்துவத்தைக் காத்து, இறைவனின் பிள்ளையாக பரஸ்பரம் பேணி, புரிந்துணர்வை ஏற்படுத்தி, அமைதியை உருவாக்குவதே திருச்சபையின் முக்கிய பணியாய் இருந்தது. நீதி நியாயத்துக்காக அயராது உழைத்து, மக்களினது உரிமைக்காகக் குரல் கொடுத்து, அமைதியான சூழலை ஏற்படுத்துவதே தனது இன்றைய முக்கிய செயற்பாடாய்க் கருதிச் செயற்படுகிறது.

## எண்ணிப்பார்க்கையில்...

### தன்னைக் கண்டு...



'தன்னைக் கண்டு தானம் வழங்கு'
என்று நம் முன்னோர்கள்
வழியொன்றை ஆக்கித் தந்தார்கள்!
நமக்கும் நமக்கென்று நம் பணத்தில் ஒரு பிடி
நிறையவே கிடைக்க வழி பிறந்தது.
எமக்கிருப்பது போக மிகுதிதான்
அடுத்தவருடன் பகிர்ந்து கொள்ள
சட்டபூர்வ அந்தஸ்தை
நாம் பெற்றுக் கொண்டோம்!! ஆனால் இயேசு தெய்வம்
என்ன கூறினார் தெரியுமா?
"உன்னைப் போல் உனக்கடுத்தவனை
அன்பு செய்!" என்றார்.
அவரும் அதையே சொன்னார்,
அதையும் தெளிவாகச் சொன்னார்.
நீ அடுத்தவரிடம் கையேந்தும்போது
அடுத்தவர் உனக்கு என்ன செய்ய வேண்டும்
என்று விரும்புவாயோ அதையே அவர்களுக்கு
நீயும் செய் என்கிறார்.
ஆம் உன்னிடம் இரப்பவனில்
நீ (தன்னாகிய) உன்னைக் கண்டு
நீ விரும்பியதை, விரும்புவதை
தானமாக வழங்கு என்கிறார்.
தெளிவாக எண்ணிப் பார்க்கையில் .......
நாம்தான் எவ்வளவு லாவகமாக
நமக்குத் தோதாக எதையும்
மாற்றியமைத்துக் கொள்கின்றோம்
என்று தெளிவாகப் புரிகிறது.

**ஆனந்தா ஏ.ஜீ.இராஜேந்திரம்**

## தொண்டனின் சில நிமிடங்கள்.....

ஆர்வமாய் உள்ளதாக 'கிறிஷானா ஷர்மிளா' அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இவர் எழுதியுள்ள ஆய்வுக் கட்டுரைகள் தொடர்பாக வினவினேன்.

'மட்டக்களப்பு கிராமிய நடனங்கள்', 'சிலப்பதிகாரத்தில் நடனச் செய்திகள்', 'கட்டுரை மலர்கள்', 'கண்ணகி வழக்குரையில் சிலப்பதிகாரத்தின் அரங்கேற்று காதை' என்பன முக்கியமான கட்டுரைகள் என அவர் குறிப்பிட்டார். அத்துடன் 2012ம் ஆண்டு மலேசியாவில் இடம்பெற்ற சர்வதேச மகாநாட்டில், 'கண்ணகி வழக்குரையில் சிலப்பதிகாரத்தின் அரங்கேற்று காதை' இவரால் படிக்கப்பட்டது.

இந்தியாவில் நடைபெற்ற சர்வதேச மகாநாடுகளிலும் இவர் பங்கேற்றுள்ளார்.

இவ்வாண்டு ஏப்ரல் 1ம் திகதி ஐரோப்பிய மூன்றாவது தமிழாராய்ச்சி மாநாட்டில் 'விபுலாநந்தரின் மதங்க சூழாமணி கூறும் இயல் இசை நாடகம்' எனும் ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பிக்கவுள்ளார்.

வட - இலங்கை சங்கீத சபையின் கலாவித்தகர் பட்டத்தையும், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பட்டமேற்படிப்பு கல்வி டிப்ளோமா பட்டத்தையும் இவர் பெற்றுள்ளார். அத்துடன் 'மோகினி ஆட்டம்' என்ற டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளார்.

ஆரம்ப காலத்தில் 'பரதஷேஸ்திரா' என்ற நடனப் பள்ளியையும் இவர் நடத்தியுள்ளார்.

இவரின் வளர்ச்சிக்கான உந்துசக்தி என்ன என்று கேட்டபோது,

அப்பா, அம்மா ஆகியோரின் ஆரம்பகால ஒத்துழைப்பும், கணவரின் ஒத்துழைப்புமே காரணம் என்று குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டின் பரதநாட்டியம், கேரளாவின் 'கதகளி', 'மோகினி ஆட்டம்', 'ஒடிசாவின் ஒடிசி நடனம்', 'வடநாட்டின் கதக்' என்பன பற்றியும் ஆழமான அறிவு கொண்டிருந்த இவருக்கு "தொண்டனின்" சார்பில் நன்றி கூறி விடை பெற்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க திருஅவையின் சமூகப் படிப்பினைகள்

**-ஒரு குறும்பார்வை**

**அருட்பணி அ. அ. நவரெத்தினம் (நவாஜி)**
சிரேஷ்ட விரிவுரையாளர்.
கிழக்குப் பல்கலைக்கழகம். இலங்கை.

சென்ற மாத தொடர்ச்சி...

3. **திருத்தந்தை 12ம் பயஸ் வழங்கிய போதனை :**

மனித உரிமைகள்: திருத்தந்தை 12ம் பயஸ் (பத்திநாதர்) போதித்த போதனைகளுள் முக்கியமானது மனித மாண்பு மற்றும் மனித உரிமைகள் குறித்ததுமாகும். இவரது போதனையின்படி அனைத்து மனிதர்களும் (ஆணும், பெண்ணும்) மனித மாண்புக்கு உரித்தானவர்கள். ஆதலால் அவர்களுக்கு மீறத்தகாத அடிப்படையான உரிமைகள் உண்டு. அவ்வுரிமைகள் பின்வருமாறு அடங்கும். உடல் வாழ்வையும், அறிவுசார் வாழ்வையும், அறநெறி வாழ்வையும் பேணுகின்ற உரிமை, தாம் விரும்பிய மறையறிவினை பெறுகின்ற உரிமை, வழிபாட்டு உரிமை, திருமணம் புரிகின்ற உரிமை, சமூகத் தேவைகளைக் கண்முன் கொண்டு பொருள் நலன்களை அனுபவிக்கின்ற உரிமை (கிறிஸ்து பிறப்பு விழா வானொலிச் செய்தி 1942).



மனிதச் சமூகங்களின் அடிப்படையும், குறிக்கோளும், முதற்பொருளும் மனிதனேயன்றி வேறு எதுவுமில்லை. எல்லாச் சமூகங்களும் மனிதனை அடிப்படையாகக் கொண்டே பிறக்கின்றன. அறிவும், சுதந்திரமும், சமூகப் பண்பும் மனிதருக்கு இயல்பாகவே உள்ளதால் அச்சமூகங்கள் மனிதரை அடிப்படையாகக் கொண்டிருப்பதோடு, மனிதரின் நலனுக்காகவே உள்ளன. அடுத்து சமூகத்தின் முதற்பொருளாகவும், அதனை உருவாக்கும் சக்தியாகவும் மனிதரே செயற்படுவதால் அவர்களைக் கருவியாக பயன்படுத்தும் முறைமைகள் அடியோடு தவிர்க்கப்படல் வேண்டும். மனிதர்கள் தன்னறிவோடும், பொறுப்புணர்வோடும் செயற்படும் தன்மை படைத்தவர்கள் ஆதலால் அவர்கள் உயிரற்ற பொருட்கள் அல்ல மாறாக மாண்பு படைத்த மனிதப் பிறவிகளாவர் என எடுத்துரைக்கின்றார்.

4. **'அன்னையும் ஆசிரியையும்'** (Mater et Magistra) மே 15, 1961




இச்சுற்றுமடல் ஏற்கனவே திருதந்தை 13ம் லியோவால் வெளியிடப்பட்ட 'தொழிலாளர் நிலைமை' சுற்றுமடலின் எழுபதாவது ஆண்டு நிறைவிலும், திருத்தந்தை 11ம் பயஸ் (பத்திநாதர்) அவர்களால் எழுதப்பட்ட 'சமூக ஒழுங்கமைப்பு' எனும் சுற்றுமடலின் முப்பதாவது ஆண்டு நிறைவிலும் 'அன்னையும் ஆசிரியையும்' எனும் பெயரில் திருத்தந்தை 23ம் யோன் (அருளப்பர்) அவர்களால் வெளியீடு செய்யப்பட்டது. மேலும், திருத்தந்தை 23ம் யோன் அவர்களால் கூட்டப்பட்ட இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு இரு ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டது. இங்கே கூறப்பட்டுள்ள பல கருத்துக்கள் 2ம் வத்திக்கான் சங்க மடலிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. முதன்முதலாக இன்றைய உலகில் (1960களில்) ஏற்பட்டு வருகின்ற மாற்றங்களை இச்சுற்றுமடல் படம்பிடித்து காட்டுகின்றது. அத்துடன் பொருளாதாரத் துறையில் தனியாரும், பொது அதிகாரிகளும் ஒத்துழைக்க வேண்டுமென வலியுறுத்துகின்றது. மேலும்,

- இன்றைய உலகில் பெருகி வருகின்ற சமூக உறவுகளை நல்லெண்ணத்தோடு வரவேற்பதுடன் 'சமூக மயமாக்கல்' பல நன்மைகளையும் கொணர்கின்றதென சான்று பகர்கின்றது (காண்க. 59–67).
- உழைப்புக்கு வழங்கப்படுகின்ற ஊதியமானது நீதியின் அடிப்படையிலும், நேர்மையின் அடிப்படையிலும் நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்று வலியுறுத்துகின்றது. ஒரு நாட்டினது பொருளாதார வளர்ச்சியானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அங்குள்ள எல்லாக் குடிமக்களின் வளர்ச்சிக்கும் பயன்பட வேண்டுமென்பது சமூக நீதியிலிருந்து பிறக்கின்ற ஒரு முக்கியமான கோரிக்கையாகும் (எண் 78).

- தனிச் சொத்துரிமை யாருக்கும் மறுக்கப்படலாகாது. ஆயினும், இவ்வுலக பொருள் நலன்களைப் பயன்படுத்துகின்ற உரிமையானது அனைவருக்கும் உரித்தானது என்பது தனிச்சொத்துரிமைக்கு முற்பட்டதாகும் (எண் 43).

**5. 'அவனியில் அமைதி'**

(Pacem in Terris) ஏப்ரல் 11, 1963




'அவனியில் அமைதி' எனும் இச் சுற்று மடலானது திருத்தந்தை 23ம் யோன் அவர்களால் 2ம் வத்திக்கான் சங்கம் உரோமையில் நிகழ்ந்து கொண்டிருந்த காலப் பகுதியில் (1962 – 1965) எழுதி வெளியிடப்பட்டது.

அக்காலகட்டத்தில் ஐக்கிய அமெரிக்கா, சோவியத் யூனியன் (இன்று யூனியன் நாடுகள் எல்லாம் தனிநாடுகளாக மாறிவிட்டன) என்கின்ற இருபெரும் வல்லரசுகள் ஒன்றையொன்று எதிர்த்துப் பனிப்போரில் ஈடுபட்டுக்கொண்டிருந்தன. அப்பனிப்போரின் வெளியடையாளமாகத் தோன்றியதுதான் அன்றிருந்த கிழக்கு, மேற்கு ஜேர்மனியும், அவற்றைப் பிரித்துநின்ற பேர்லின் சுவருமாகும். அக்காலகட்டத்தில் அமெரிக்க நாட்டில் கறுப்பின மக்கள் வேறுபடுத்தப்பட்டு ஒதுக்கிவைக்கப்பட்ட சட்டமும் அமுலிலிருந்தது. அதற்கெதிரான போராட்டங்களும் நிகழ்ந்தன. மாட்டின் லூத்தர் கிங் அதற்கெதிரான அமைதி வழிப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தார். அமெரிக்க நாட்டின் முதல் கத்தோலிக்க அதிபர் (ஜனாதிபதி) ஜோன் எஃப் கென்னடியின் தலைமையில் அந்நாட்டிலும், உலகிலும் புதிய எதிர்பார்ப்பு தோன்றியது.

ஆயினும், அமெரிக்க நாடானது இத்தாலி மற்றும் துருக்கி போன்ற நாடுகளில் நிறுவிய ஏவுகணையானது தங்களை நோக்கியதெனக் கருதிய சோவியத் யூனியன் கியூபா நாட்டில் அமெரிக்க நாட்டினை நோக்கிய வண்ணம் தனது ஏவுகணைகளை நிறுவியது. இதனால் இருநாடுகளுக்கிடையிலும் இழுபறிநிலை உருவாகியதுடன் அணு ஆயுதப்போர் மூண்டுவிடுமோ என்கின்ற அச்சநிலையும் தோன்றியது. இத்தகைய பின்னணியில் திருத்தந்தை 23ம் யோன் அமெரிக்க அதிபர் ஜோன் கென்னடியையும், சோவியத் யூனியன் அதிபர் நிகிட்டா குருஷோவையும் தொடர்புகொண்டு உலக அமைதியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, உலகில் அமைதி ஏற்பட வழிசமைத்தார். இதனால் 'கியூபா ஏவுகணை நெருக்கடி' (Cuban Missile Crisis) ஒக்டோபர் 16 – 28, 1962 முடிவுக்கு வந்தது.

திருத்தந்தை 23ம் ஜோன் அவர்களால் உலக அமைதி குறித்து வெளியிடப்பட்ட சுற்றுமடலானது உலக மாந்தர் அனைவராலும் வரவேற்கப்பட்டது. திருஅவையின் மக்களுக்கு மட்டுமின்றி 'நல்லுள்ளம் படைத்த எல்லா மனிதருக்கும்' என்று தொடங்கிய இம்மடலானது மிகவும் எளிய முறையில் அனைவரையும் கவரும் வண்ணம் அமைந்துள்ளது. 2ம் வத்திக்கான் சங்கத்தின் இன்றைய உலகில் திருச்சபைக் கொள்கைத் திரட்டில் காணப்படுகின்ற உலக அமைதி குறித்த போதனையின் பெரும்பாலான பகுதிகள் இச் சுற்றுமடலை அடியொற்றி அமைந்ததாகும்.

இம்மடலின் சிறப்புக்களாக, மனித உரிமைகள் தனிப்பட்ட முறையில் வலியுறுத்தப்படுகின்றன. உண்மை, நீதி, அன்பு, சுதந்திரம் ஆகிய நான்கு நற்பண்புகளும் அமைதியைத் தாங்கி நிற்கும் தூண்களென இம்மடல் பறைசாற்றுகின்றது. மனிதர் அனைவரும் தனியாட்கள் என்கின்ற முறையிலும், இறைவனின் பிள்ளைகள் என்கின்ற முறையிலும் பொதுமைப்பண்பு கொண்ட, மீறத்தகாத, அந்நியமயமாக்கப்பட முடியாத உரிமைகளைக் கொண்டுள்ளனர். அதாவது தமக்கென உரிமைகளைக் கோரும் மனிதர்கள் அதே உரிமைகள் அடுத்தவருக்கும் உரியது என்பதனை மனதிற் பதியச் செய்யவேண்டும். மனிதனின் உரிமைகள் எவையென்பதனையும் இச்சுற்றுமடல் வகைப் படுத்தி வெளிப்படுத்தியுள்ளது.

■ (சமூக அக்கறை தொடரும்)

உலகில் பருவம் தப்பாத கால நிலை மற்றும் சீரான கால நிலை இருப்பதற்குக் காடுகள் முக்கியம். காடுகள் அழிவதால் ஏற்படும் பாதிப்புகள் பற்றி விழிப்பு உணர்வ ஏற்படுத்துவதற்கு ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 21 -ம் தேதி உலகக் காடுகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது. ஒரு நாடு நல்ல வளமாக இருக்க வேண்டுமானால் 33 சதவிகிதம் காடுகள் இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை இரக்கத்தை வேண்டுவோம்!

மற்றில்டா இராஜேந்திரம்


உயிர்ப்பு ஞாயிறு தினத்திற்கு அடுத்து வரும் ஞாயிற்றுக்கிழமை "இறை இரக்கத்தின் ஞாயிற்றுக்கிழமை" என உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகின்ற தினமாக உள்ளது. அன்று மோசேக்கு இறைவன் தமது பெயரினை "இரக்கமும், பரிவும் கொண்ட இறைவன்" என்று வெளிப்படுத்தினார். கடந்த நூற்றாண்டில் அருட்சகோதரி. புனித மரிய பவுஸ்தினா கோவால்ஸ்கோவின் மூலமாக மிகவும் விரிவாகவும், தெளிவாகவும், ஆழமாகவும் இறை இரக்கத்தின் அவசியத்தை உலகம் முழுவதற்குமாக இயேசு பெருமான் வெளிப்படுத்தினார். 1905ம் வருடம் ஆவணித் திங்கள் 25ம் நாளன்று போலந்து நாட்டின் க்ளோகோவிச் எனும் கிராமத்தில் போரின் தாக்கத்திற்கு உட்பட்டிருந்த சூழலிலே, ஓர் ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்த பவுஸ்தினா கல்வி கற்க முடியாத நிலை. ஆயினும், இறைவனின் வழி நடத்துதல் அவருடன் எப்போதும் இருந்தது. 1925ம் வருடம் ஆவணித் திங்கள் முதலாம் நாளில் "இரக்கத்தின் தாய் அருட்சகோதரிகள் சபை"யில் இணைந்து அருட்சகோதரி. மரிய பவுஸ்தினா எனும் பெயரைப் பெற்றார். 1931ம் வருடம் மாசித் திங்கள் இருபத்திரண்டாம் நாளன்று புளோக் நகரிலிருந்த பெரிய கன்னியர் இல்லத்தில் வாழ்ந்தபோதே, இரக்கத்தின் ஆண்டவர் உயிருள்ள சாயலாக, முப்பரிமாண வடிவில் காட்சியளித்தார். இன்று எங்கெல்லாம் இறைஇரக்கம் கொண்டாடப்படுகிறதோ? அங்கெல்லாம் அருட்சகோதரி. மரிய பவுஸ்தினாவும் சிறப்பிக்கப்படுகிறார். இறையிரக்கத்துடன் ஆழமாக ஒன்றித்து மனித ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்காக உழைத்த அவருக்கு இத்தகைய மகிமை கிடைத்தது சாலவும் பொருத்தமுடையது என்றே கூறவேண்டும். இவருக்கு இயேசு பெருமான் நீண்ட வெண்ணிற ஆடையணிந்தவராக, வரது கரத்தை ஆசிரளிக்க உயர்த்தியவராகவும், இடது கரத்தினால் தமது இதயத்தைத் தொட்ட நிலையிலும் காட்சியளித்தார். அவரது திரு இதயத்திலிருந்து ஒளிமயமான இரு கதிர்கள்: ஒன்று சிவப்பு நிறத்திலும், மற்றொன்று மங்கிய வெண்ணிறத்திலும் புறப்பட்டன. "நீ காணும் இவ்வுருவத்தை அப்படியே வரைந்து அதன் கீழ் "ஆண்டவரே! நான் உம்மில் நம்பிக்கை வைக்கின்றேன்" என எழுது. உலக முழுவதும் இச்சாயல் பரப்பப்பட்டு வணங்கப்படவேண்டும்.




உயிர்ப்புப் பெருவிழாவுக்கடுத்த ஞாயிற்றுக்கிழமை "இறை இரக்க ஆண்டுப் பெருவிழாவாகக் கொண்டாடப்படவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். இதனையே புனித பவுஸ்தினாவும் அயராது செய்து முடித்தார். 1934ம் வருடத்தில் இத்திருவுருவம் வரையப்பட்டு முடிந்தது. இயேசு பெருமானின் காட்சிகள் மற்றும் இறைமகன் கூறிய வார்த்தைகள் அனைத்தையும் தனது நாட் குறிப்பேட்டில் எழுதி வைத்துள்ளார். 1935ம் வருடம் உயிர்ப்புப் பெருவிழாவின் பின் வந்த வியாழக்கிழமை முதல் இறைஇரக்கப் பெருவிழா முடியும்வரை "தூய விடியலின் அன்னை" திருத்தலத்தில் அதன் பரிபாலகரான அருட்தந்தை. சாவாட்ஸ்கி அடிகள் மறைமாவட்ட ஆயரின் அனுமதி பெற்று இந்த இறை இரக்கப் படத்தை முதன் முதல் தொங்கவிட்டார். மறுநாள் வெள்ளிக்கிழமை புனித பவுஸ்தினாவின் ஆன்மீகக் குரு இறைஇரக்கம் பற்றி மறையுரையாற்றிய வேளையில் அனைவர் கண்களும் படத்தையே நோக்கிக்கொண்டிருந்தன. அப்போது ஆண்டவரின் வல்லமை அங்கு குழுமியிருந்த அனைவர் மீதும் ஆச்சரியமான விதத்தில் இறங்கியதை அனைவரும் உணர்ந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கடுகுகதை - 86

# ஈடு

– பற்றி

அன்ரன் தன் அலுவலக நண்பன் தணிகாசலத்துடன் சித்திரைப் புத்தாண்டு சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தார். அதன்படி அவர்கள் இருவரும் கதைத்துக் கொண்டிருந்தார்கள். தணிகாசலம் கையில் புத்தம் புதிய குடையொன்றை வைத்திருந்தார். அதில் நிதிநிறுவனம் ஒன்றின் பெயர் பொறிக் கப்பட்டிருந்தது.

“என்ன தணி! எங்கால இந்தக் குட?” என்று அன்ரன் கேட்டார்.

“இது மச்சான் ... நகையொண்ட ஈடுவச்ச நான் ... அதற்கு பரிசாக இத தந்தவங்க....”

“முந்தி ஈடு வக்கிற சரியான கஷ்டம்” இப்ப மூலைக்கி மூல பினான்ஸ் கொம்பனிங்க.... வங்கிங்க எல்லாம் வந்திட்டு. கூப்பிட்டு, கூப்பிட்டு ஈடுபிடிக்கிறாங்க.... ஈடு வைக்கிற தொகயப் பொறுத்து பரிசெல்லாம் மாறுபடுது....” என்றார் அன்ரன்.

“வங்கிலோன் எடுக்கிற என்டா எவ்வளவு பேப்பர் வேலெயெல்லாம் செய்யனும்... சம்பளத் துண்டு, பிணையாளிகள், உறுதிக்கொப்பி.... எவ்வளவு சாமான்கள தேடணும். ஈடுவைக்கிற என்டா வெறும் ரசீது துண்டு மட்டும்தான் அவங் கட சிலவு” என்று தணி என்ற தணிகாசலம் சொன்னார்.

“அதுமட்டுமில்ல தணி, வங்கில லோனுக்கு ஆண்டு வட்டி பதினைந்து சதவீதம். ஆனா நக ஈட்டுக்கு மாதவட்டி ஒண்டு தசம் ஐந்து வீதம் எண்டு வைச்சிக்கொள்வோம்... அப்ப ஆண்டு பதினெட்டு சதவீதம் வருகுது அல்லவா...?” என்று கேட்டார் அன்ரன்.

அதற்குத் தணிகாசலம் உத்தரமாக...” கண்ணப் பொத்தி அடிக்கிறது என்றது இதத்தான் போல....” நம்மட அப்பாவிச்சனங்கள எப்புடியெல்லாம் ஏமாத்திறாங்கடாப்பா.... போதாக்குறைக்கு ‘மைக்ரோபினான்ஸ்’ எண்டு இன்னொரு கூட்டம் அலையுது...” என்று பெருமூச்சுவிட்டார்.




தனர். இயேசு பெருமான் புனித பவுஸ்தி னாவிடம் கூறிய வார்த்தைகள் மிக ஆழமான பொருளைக் கொண்டுள்ளன. ஒரு தடவை அவர் “இயேசுவின் இரக்கம் எமது பாவங்களை விடப் பெரியது. அவர் எம்மை மனமாற்றத்திற்கே அழைக்கிறார். அவருடைய இரக்கத்தைப் பெறவும், இவ்வுலகிலுள்ள அனைவரும் இந்த மகிழ்ச்சிக்குள் வரவும் நாம் மற்றவர்களுக்கு வாய்க்கால்களாகத் திகழவும் வேண்டும். அவரது இரக்கத்தின் அருள், நம்பிக்கையில் தங்கியுள்ளது” என இயேசு பெருமான அவரிடம் கூறியதாகக் கூறினார். இயேசு பெருமானில் ஒரு ஆன்மா நம்பிக்கை வைக்குமளவுக்கு அமைவாகவே அது அருளையும் பெற்றுக்கொள்கிறது. எனவே, அன்றாடம் “இயேசுவே, நான் உம்மில் நம்பிக்கை வைக்கிறேன்” என்று சொல்லி, மனக்கடினத்தோடு இவ்வுலகில் வாழ்ந்து நகரத்தை நோக்கி நடைபோடும் பாவிகளுக்காகவும், உத்தரிக்கும் நிலையில் துன்புற்றுத் தவிக்கும் ஆன்மாக்களுக்காகவும் இறைஇரக்கத்தைக் கேட்டு மன்றாடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




50 வருடங்கள் அறிவியல் உலகைக் கண் அசைவில் ஆட்டிப் படைத்த பிரபல பேராசிரியரும், அறிவியலாளருமான ஸ்டீபன் ஹாக்கிங் மரணமடைந்துவிட்டார். ஸ்டீபன் ஹாக்கிங்கின் வாழ்க்கை கற்றுத் தந்த பாடம் வரலாற்றில் தனித்துவம் மிக்கது என்றாலும் மிகையாகாது.

பிரித்தானியா நாட்டில் லண்டன் அருகில் சிறிய நகரத்தில் பிறந்தவர்தான் சாதனை நாயகன் ஸ்டீபன் ஹாக்கிங். ஆரம்ப காலத்தில் அப்பாவின் ஆசைப்படி வைத்தியராக ஆசைப்பட்டார். ஆனால், அவருக்காக உலகம் பல ஆச்சரியங்களுடன் காத்து இருந்தது.

இவரின் கல்வி செயின்ட் அல்பான்ஸ் என்னும் சிறிய பள்ளியில் தொடங்கியது. வறுமையிலும் சாதிக்கத் துடித்த இவருக்கு ஆரம்ப கட்டமாக அமைந்தது அந்த சிறிய பள்ளிதான். இவருக்கு 21 வயது இருக்கும் போது நரம்பியல் நோயால் உடலியக்கம் பாதிக்கப்பட்டது. இது "அமியோடிராபிக் ஸ்கிலோரோசிஸ்" வகையைச் சார்ந்த நரம்பியல் குறைபாடு ஆகும். இதனால் இவர் உடல் மொத்தமும் இயங்காமல் போனது. கழுத்துக்குக் கீழ் இவரால் எதையும் அசைக்க முடியவில்லை.

இவர் இரண்டு வருடத்தில் இறந்து விடுவார் என்றும், 23 வயதை கடைசி வருடமாக வும் வைத்தியர்கள் குறித்தார்கள். ஆனால், அப்போதும் கூட மனம் தளராமல், இவர் கேம்பிரிட்ஜில் டாக்டர் பட்டம் படிக்கச் சென்றார். அந்த தன்னம்பிக்கைதான் இவரது வாழ்வை மாற்றியது எனலாம்.

நரம்பியல் நோயால் உடலியக்கம் பாதிக் கப்பட்ட நிலையிலும், விஷேசமாக வடிவ மைக்கப்பட்ட சக்கர நாற்காலியில் அமர்ந்தபடி தனது ஆராய்ச்சியைத் தொடர்ந்தார்.

நவீன தொழில்நுட்பத்தின் உதவியால் இவர் சாதனைகளில் இறங்கினார். இவரது கண் அசைவுகளை வைத்து என்ன பேசுகிறார் என்று கண்டு பிடிக்க சாப்ட்வேர் (மென்பொருள்) தயாரிக்கப்பட்டு அதுவே அவரது குரலாக மாறியது. அதன்பின் நடந்தது வரலாறு. அறிவியல் சரித்திரம். இவர் செய்த ஆராய்ச்சி முடிவுகள் எல்லாம் இப்படித்தான் வெளியானது.

50 வருடங்கள் இவர் ஒரே இருக்கையில் இருந்தார். ஆனால், உலகமே இவரைச் சுற்றி வந்தது. ஒருமுறை அவரது வீட்டில் பெரிய விருந்து ஏற்பாடு செய்துவிட்டு எதிர்காலச் சந்ததிக்காகக் காத்து இருந்தார். ஆனால், அப் போது யாரும் அவரைப் பார்க்க வரவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது அவர் இவ்வாறு கூறியிருந்தார்: "இப்போது என்னை யாரும் பார்க்க வர வில்லை. ஆனால், ஒருநாள் நீங்கள் எதிர்காலத்தில் இருந்து யாரையாவது பார்க்க கடந்த காலத்திற்குச் செல்வீர்கள்" என்று குறிப்பிட்டார்.




அண்டம் குறித்து ஆராய்ச்சிகளில் முன்னேற்றம் ஏற்பட்டதற்கு இவர்தான் காரணம் என்று சொல்லலாம். அதேபோல் உலகமே பெருவெடிப்பு எனப்படும் (Big Bang) "பிக் பாங்க்" குறித்து பேசியபோது இவர் மட்டும்தான் "கருந்துளை" எனப்படும் (Black Hole) குறித்துப் பேசினார். "கருந்துளை" தான் இந்த பிரபஞ்சத்தின் முடிவாகும். "கடவுள் துகள்" (God Particle) எனப்படும் "ஹிக்ஸ் போஸன்" (Higgs Boson) இந்த பிரபஞ்சத்தையே அழிக்கும் பயங்கர ஆற்றல் கொண்டது என்று ஸ்டீபன் ஹாக்கிங் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பிரபஞ்சத்தில் உள்ள அனைத்திற்கும் வடிவமும் அளவும் கொடுத்த "கடவுள் துகள்" நிலையற்ற தன்மைக்குச் செல்லலாம் என்பது ஸ்டீபன் ஹாக்கிங்கின் எச்சரிக்கையாகும்.

1970ம் ஆண்டு அவர் கருந்துளைகள் கதிரியக்கத்தை வெளியிடுகின்றன என் னும் தனது புகழ்பெற்ற கண்டுபிடிப்பை வெளி யிட்டார். 2015ம் ஆண்டு "நாம் தனியாகவா இருக்கிறோம்?" என்னும் கேள்வியின் விடை யைக் கண்டறியும் விதத்தில் வேறு கிரகங்களில் உயிரினங்கள் வாழ்கின்றனவா என்னும் ஆய்வுக ளைத் தொடங்க உதவினார்.

இருமுறை திருமணம் செய்த இவ ருக்கு மூன்று பிள்ளைகளும், மூன்று பேரப் பிள்ளைகளும் இருக்கிறார்கள். சோதனைகளும் வேதனைகளும் ஏராளமாக இருந்தாலும் அறிவியில் உலகில் அவர் புரிந்த சாதனைகள் ஏராளம். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் Sir Isaac Newton வகித்த Lucasian Professor of Mathematics என்னும் புகழ் பெற்ற பொறுப்பை அவர் வகித்தார்.


சுமார் 12 கௌரவப் பட்டங்கள் வகித்த அவருக்கு பிரித்தானியாவின் உயரிய கௌரவமாகிய Commander in the Most Excellent Order of the British Empire என்னும் பட்டம் வழங்கப்பட்டது. பிரித்தானியராக இருந்தாலும் அறிவியல் உலகில் அவரது பங்களிப்பைக் கௌரவிக்கும் வகையில் அமெரிக்கா வின் உயரிய கௌரவமாகிய Presidential Medal of Freedom அமெரிக்க ஜனாதிபதி Barak Obama வால் அளிக்கப்பட்டது.

எவ்வளவோ கண்டுபிடிப்புகள், கோட்பாடு கள், பேரும் புகழும் இருந்தாலும் எப்போதும் மக்கள் பூமியில் மட்டும் வாழாமல் அதையும் தாண்டி இன்னொரு கிரகத்திற்கும் சென்று வாழ வேண்டும் என்னும் ஆசை கொண்டவர்.

ஆனால், "எவ்வளவு பெரிய விண்வெளியாக இருந்தாலும் நீங்கள் நேசிக்கும் மனிதர்கள் அங்கு இல்லாவிட்டால் அதனால் பயன் எதுவும் இல்லை" என்று கூறிய ஸ்டீபன் ஹாக்கிங்கின் வார்த்தைகளின் பின்னால் அன்புக்கான ஒரு ஏக்கம் இருந்தது எத்தனை பேருக்குத் தெரியும்?

இவரது ஆராய்ச்சிகள், கருத்துக்களைப் பார்த்த உலக விஞ்ஞானிகள் இவரைச் சுற்றிச் சுற்றி வந்தார்கள்.

இந்த நூற்றாண்டின் மிகச் சிறந்த அறிவியலாளர் ஹாக்கிங் என்பதில் சந்தேகமே இல்லை. அவரின் பிரிவு பிரித்தானியாவிற்கு மட்டும் அல்ல, முழு உலகிற்கும் சோகத்தை கொடுத்துள்ளது.



நன்றி - இணையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் தவணை எதிர்நோக்கு முன்னோடிப் பரீட்சை

**தரம் : 11** **கத்தோலிக்கத் திருமறை** நேரம் : 3 மணித்தியாலங்கள்

போதகர் S. அருமைராஜா (Dip.in.Chr (India))

பாடம் - 16

**62. தத்தம் வீடுகளில் மனத்துறவைப் பின்பற்றி ஒறுத்தல் முயற்சிகளிலும், பரிசுத்தத்தனத்திலும் வாழ்ந்தவர்கள்:**
1. ஏகாந்திகள் 2. <u>தபோதனர்</u> 3. வனத்துப் பிதாக்கள் 4. துறவிகள்

**63. ஏகாந்திகள் அல்லது வனத்துப் பிதாக்கள் என அழைக்கப்பட்டவர்களில் முதன்மையானவர் :**
1. <u>தேப்ஸ் சின்னப்பர்</u> 2. புனித பசில்
3. புனித அகுஸ்தினார் 4. புனித ஆசீர்வாதப்பர்

**64. தேப்ஸ் சின்னப்பரின் சீடர் :**
1. <u>எகிப்து அந்தோனியார்</u> 2. புனித பக்கமேயு
3. ஆசிர்வாதப்பர் 4. புனித அகுஸ்தினார்

**65. துறவற வாழ்வை முறைப்படுத்த உழைத்தவர்கள் :**
A. புனித பசில் B. புனித ஜெறோம்
C. புனித அகுஸ்தினார் D. புனித அம்புறோஸ்
1. A, B 2. B, C 3. C, D 4. <u>A, B, C, D</u>

**66. துறவற குழும வாழ்வின் ஆரம்பக் கர்த்தாக்களாகக் குறிப்பிடப்படுபவர்கள் :**
A. புனித பக்கோமியா B. புனித ஆசீர்வாதப்பர்
C. புனித அகுஸ்தினார் D. தேப்ஸ் சின்னப்பர்
1. <u>A, B</u> 2. B, C 3. C, D 4. A, B, C

**67. துறவற வாழ்வின் பண்புகள் :**
A. குழுவாழ்வு B. செப வாழ்வு
C. பொது வாழ்வு D. பணி வாழ்வு

1. <u>A, B</u> 2. B, C 3. C, D 4. <u>A, B, D</u>

**68. ஏழைகளின் சிறிய சகோதரிகள் சபையின் பணிகள் :**
1. ஏழ்மையில் வாழ்தல் 2. <u>முதியோர், ஏழைகள் பராமரிப்பு</u>
3. கல்வியூட்டல் 4. மறைக்கல்விப் பணி

**69. பிரான்சிஸ்கன் மறைதூதுச் சகோதரர் சபையின் பணிகள் :**
A. கல்விப்பணி B. மறை அறிவித்தல்
C. குடும்பப் பணி D. சிறுவர் இல்லங்கள் நடாத்துதல்
1. A, B 2. B, C 3. C, D 4. <u>B, D</u>

**70. குருத்துவம் சார்ந்த துறவிகள் :**
A. அமலமரித் தியாகிகள் சபை B. அன்புச் சகோதரர் சபை
C. சில்வெஸ்ரர் பெனடிக் சபை D. மாறிஸ் சகோதரர்கள் சபை

1. A, B 2. B, C 3. C, D 4. <u>A, C</u>



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**(சரியான விடையைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

1. யாபேசின் பெரியோர் நாகாசுவிடம் "ஏழு நாள்கள் எங்களுக்கு ...................... தாரும். நாங்கள் இஸ்ரயேல் எல்லை முழுவதும் தூதர்களை அனுப்புவோம். எங்களை மீட்பார் எவருமில்லையெனில் நாங்கள் உம்மிடம் சரணடைவோம்" என்றனர்.

   அ) நாட்கள் ஆ) காலம் இ) தவணை

2. தூதர்கள் சவுலின் ஊராகிய கிபயாவுக்கு வந்து, மக்கள் செவிபடச் செய்தியைச் சொல்ல, மக்கள் அனைவரும் குரலெழுப்பி அழுதனர். அப்போது ...................... வயலினின்று மாடுகளை ஓட்டிக்கொண்டு வந்தார். "மக்கள் ஏன் அழுகிறார்கள்" எனக் கேட்டார்.

   அ) தாவீது ஆ) சவுல் இ) நாகாசு

3. சவுலிடம் மக்கள் யாபேசின் ஆள்கள் சொன்னதைச் சொன்னார்கள். இதை அவர் கேட்டுக்கொண்டிருந்தபோது, கடவுளின் ஆவி அவரை வலிமையுடன் ஆட்கொள்ள அவரது சினம் ...................... . அவர் ஒரு சோடி மாடுகளைத் துண்டுகளாக வெட்டினார்.

   அ) கனன்றது ஆ) பற்றியது இ) கூடியது

4. சவுல் வெட்டிய துண்டுகளைத் தூதர்கள் வழியாக இஸ்ரயேல் எல்லை முழுவதும் அனுப்பி, சவுலின் பின்னும், சாமுவேலின் பின்னும் வராதவனின் மாடுகளுக்கு இவ்வாறு நேரிடும் என்று சொல்லியனுப்ப மக்களை ...................... பற்றிய அச்சம் ஆட்கொண்டது.

   அ) ஆண்டவர் ஆ) இறைவன் இ) சவுல்

5. மக்கள் ஒன்று திரண்டு வந்தனர். அவர் அவர்களைப் பெசேக்கில் கணக்கெடுத்தபோது, இஸ்ரயேலின் மக்கள் மூன்று இலட்சம் பேரும், ...................... முப்பதாயிரம் பேரும் இருந்தனர். வந்திருந்த தூதர்களிடம், "நாளை வெயில் ஏறும்முன் உங்களுக்கு மீட்பு கிடைக்குமென கிலயாதிலுள்ள யாபேசின் மக்களுக்குத் தெரிவியுங்கள்" என்றார்.

   அ) இஸ்ரயேலர் ஆ) யூதர்கள் இ) யூதாவினர்

6. தூதர்கள் அதை யாபேசின் மக்களுக்குக் கூற, அவர்கள் மகிழ்ச்சியுற்றனர். ஆகவே, அவர்கள் "...................... நாங்கள் உம்மிடம் சரணடைவோம். உம் விருப்பப்படியே எமக்குச் செய்யும்" என்றனர். மறுநாள் சவுல் மக்களை மூன்று படைகளாகப் பிரித்தார்.

   அ) என்றும் ஆ) காலையில் இ) நாளை

7. கீழ்வானம் வெளுத்தபோதே அவர்கள் ...................... வந்து, வெயில் ஏறுவதற்குள் அம்மோனியரை வெட்டி வீழ்த்தினர். இருவர் கூட இணையாதபடி எஞ்சி இருந்தவர்கள் சிதறடிக்கப்பட்டார்கள்.

   அ) தங்குமிடத்தினுள் ஆ) பாளையத்தினுள் இ) பாசறையினுள்

8. பிறகு மக்கள் சாமுவேலிடம் "சவுலா எங்களை ஆள்வது?" எனக் கேட்டோரைக் கொன்று போடுவோம்" என்றனர். ஆனால், சவுல், "இன்று யாரையும் கொல்லக்கூடாது. ஏனெனில், இன்று ஆண்டவர் ...................... மீட்பு அளித்துள்ளார்" என்றார்.

   அ) இஸ்ரயேலுக்கு ஆ) யாபேசுக்கு இ) யூதாவினர்க்கு

9. சாமுவேல் மக்களை நோக்கி, "வாருங்கள் கில்காலுக்குச் சென்று, அங்கே ...................... உறுதிப்படுத்துவோம்" என்றார். அவ்வாறே சென்று ஆண்டவர் திருமுன் சவுலை அரசராக்கி, நல்லுறவுப் பலிகளைச் செலுத்தினர். சவுலும், இஸ்ரயேலரும் பெருமகிழ்ச்சி அடைந்தனர்.

   அ) ஆட்சியை ஆ) அரசாட்சியை இ) இராச்சியத்தை

10. அப்போது சாமுவேல் இஸ்ரயேலருக்குக் கூறியது: "நீங்கள் கேட்டுக்கொண்ட அனைத்தின்படி நடந்து, உங்கள் குரலுக்குச் செவிகொடுத்து, ஓர் ...................... ஏற்படுத்தினேன். இதோ! ஓர் அரசர்! இவர் உங்களை வழிநடத்துவார்.

    அ) இராஜாவை ஆ) அரசனை இ) அதிபதியை

**(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவை வளர்ப்போம் - 178



**பரிசுப் போட்டி**

(பொருத்தமான சொற்களின் கீழ்க் கோடிடுக)

**சிறுவர்களுக்கு மட்டும் :**
முடிவுத் திகதி :
**30.04.2018**

1. நோர்வே, சுவீடன் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய தீபகற்பம் :
   (யூகோசிலாவியா - ஸ்கான்டிநேவியா - பெனலக்ஸ்)

2. ஈரப்பதத்தின் தன்மைகளை அளவிடும் கருவியின் பெயர்:
   (தேமா மீற்றர் - பிரஹிலியோ மீற்றர் - ஹைகுரோ மீற்றர்)

3. இயேசு பெருமானின் தாய்மொழியாக இருந்த மொழி:
   (ஹீப்ரு - அரமிக் - லத்தீன்)

4. பிரான்ஸ் நாட்டு லூத்தரன் சபையில் முன்னணித் தலைவரானவர்:
   (லூத்தர் - ஜெராட் - கல்வின்)

5. 'அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே ..............................?'
   (வளையுமா - நிமிருமா - திருந்துமா)

6. பின்வருவனவற்றுள் தொழிற் பெயராக வருவது:
   (பாரமரிப்பு - போதல் - போகாமை)

பெயர் : ..........................................................

முகவரி : ..........................................................

..........................................................

**அனுப்பவேண்டிய முகவரி:**
திருவிவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்- 178
தொண்டன்
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:

..........................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருவிவிலியம் கற்போம், அறிவை வளர்ப்போம் - 176,
போட்டிகளில் பங்கு பற்றியோர் 23 பேர். ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதியோர் 20 பேர்.

## திருவிவிலியம் கற்போம் - 176 விடைகள்

முத்தமிட்டு, ராகேலின், மனிதர்கள், இரு அப்பங்கள், மேட்டிலிருந்து, பரவசமடைந்து, உன்னிடம், இறைவாக்கினரோடு, தொழுகைமேடு, சிற்றப்பன்.

## அறிவை வளர்ப்போம் - 176 விடைகள்

1. ஹட்சன் விரிகுடா
2. பரோகிராப்
3. துனிசியா
4. கத்தோலிக்கத்திருச்சபை
5. ஆத்திரம் ஆகாது
6. பாடுபொருள்

## பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS

போட்டியின் ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி II ம் பிரிவில் 200/= பரிசு பெறுவோர்

* றொ. எமலின் ஸ்றெய்னா,
இல. 08, திஸ்ஸவீரசிங்கம் சதுக்கம்,
4ம் குறுக்கு, எல்லை வீதி,
மட்டக்களப்பு.

* R. உஷாந்தினி,
புனித திரேசா கன்னியர் இல்லம்,
சின்ன உப்போடை,
மட்டக்களப்பு.

* லோ. டனுஸ்ரன்,
98, விபுலானந்தபுரம்,
மயிலம்பாவெளி,
தன்னாமுனை, மட்டக்களப்பு.

* J. ஜிதேஷன்,
15/53, 5ம் குறுக்கு, காந்தி கிராமம்,
சின்ன ஊறணி,
மட்டக்களப்பு.

## சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 128 முடிவுகள்

**1ம் பரிசு - 400/=**

* சு. யூதாசினி
யூதா நகர்,
தேற்றாத்தீவு.

**2ம் பரிசு - 300/=**


* ரமேஸ் சுபதர்ஷினி,
கார்மேல் மகளிர் இல்லம்,
இல. 80, அம்பாறை வீதி,
அக்கறைப்பற்று - 08.

**3ம் பரிசு - 200/=**

* அ. சிசிலியா,
புனித திரேசா கன்னியர் இல்லம்,
சின்ன உப்போடை,
மட்டக்களப்பு.

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org